செந்தமிழ்

தொகுதி : 92 | நவம்பர் 1998 | பகுதி : 11

திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURAI TAMIL SANGAM

முதன்மை ஆசிரியர் ***மா. தனுக்கோடிபாண்டியன்*** பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

ஆசிரியர் பேரறிஞர் ***நா. பாலுசாமி***
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.

செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர்	தமிழண்ணல்
	முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
	மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.
பேரறிஞர்	செ. கந்தசாமி
	முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.
பேரறிஞர்	பழநி. அரங்கசாமி, தஞ்சாவூர்.
பேரறிஞர்	ம.ரா.போ. குருசாமி
	செந்தில், தாமு நகர், கோயம்புத்தூர்.
பேரறிஞர்	ச. மெய்யப்பன்
	முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.
	அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
பேரறிஞர்	சி.கதிர் மகாதேவன்
	மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.
பேராசிரியர்	கு. துரைராசு
	முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.
பேரறிஞர்	அ.அ. மணவாளன்
	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
பெரும்புலவர்	இரா. இளங்குமரன்
	திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி.
பேராசிரியர்	ந. பொன்னப்பன்
	மதுரைக் கல்லூரி, மதுரை.
பேரறிஞர்	திருமதி. பத்மா சீனிவாசன்
	ஆங்கிலப் பேராசிரியர்,
	மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.
பேரறிஞர்	ந. மாணிக்கம்
	தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.
பேரறிஞர்	திருமதி. சரசுவதி விசய வேணுகோபால்
	மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.
பேரறிஞர்	எஸ்.எம். கமால்,
	21, ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம்.
பேரறிஞர்	ஈகே. இராமசாமி
	தமிழ்ப் பேராசிரியர், யாதவர் கல்லூரி, மதுரை.
பேராசிரியர்	சே. அரிராமநாதன்,
	தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

செந்தமிழ்

திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURAI TAMIL SANGAM

இதழ் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 60	
வாணாள் கட்டணம்	ரூ. 500	ரூ. 1000
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ் கட்டணம்	ரூ. 6	

முதன்மை ஆசிரியர் *மா.தனுக்கோடிபாண்டியன்* பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

ஆசிரியர் பேரறிஞர் *நா. பாலுசாமி*
எம்.ஏ., பி எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.

பொருளடக்கம்

1. எல்லோர்க்கும் தொல்காப்பியம் 371

பேரறிஞர் நா.பாலுசாமி

2. ஆசாரக் கோவையில் வாழ்வியல் நெறிகள் 374

பேரறிஞர் சா. கிருட்டிணமூர்த்தி

3. பதிற்றுப்பத்தின் பாடற்பெயர்கள் 382

பேரறிஞர் அ.மா. பரிமணம்.

4. முருகப்பெருமானின் அறுமுகப்புனைவு 392

பேரறிஞர் நிர்மலா மோகன்

5. சோழன் -மணக்கிள்ளி 400

அறிஞர் T.N. அப்பனையங்கார்

பேரறிஞர் நா.பாலுசாமி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

(தொல்-சொல்-வினை)

சூத்திரம் 229

பின்முன் கால்கடை வழிஇடத்து என்னும்
அன்ன மரபின் காலம் கண்ணிய
என்ன கிளவியும் அவற்றியல் பினவே

(ப.ரை) பின், முன், கால், கடை, வழி, இடத்து என்னும் ஈற்றில் நிற்பனவும், அன்ன மரபின்-அத்தன்மையவாகிய, காலம் கண்ணிய-காலம் குறித்து வருவனவும், என்ன கிளவியும்-அவை போன்ற பிறவும், அவற்று இயல்பின - மேற்கூறியன போன்ற வினை எச்சங்களேயாம்.

பின் முதல் இடத்து என்பது முடிய உள்ளனவும், அவை போன்ற காலம் காட்டும் சொற்களும் பிறவும் முன் கூறப்பட்ட வினை எச்சங்களின் தன்மையவாம்.

(வி.ரை.) பின்......இடத்து என்பன ஏழாம் வேற்றுமை உருபுகளாகும். இவை காலம் காட்டுவனவாம். ஆனால், இவையும் இவைபோன்றுள்ள பிற சொற்களும் ஒரு வகையில் வினை எச்சங்களுள் அடங்குவனவாம். ஏனென்றால், பிற வினை எச்சங்கள் போன்றே இவையும் வினைமுற்றுக் கொண்டே முடியவல்லன. கிளவி-சொல். என்ன-அன்ன. பிற - அவை போல்வன.

(எ.டு.)

(அ) நீயே பொய் கூறியபின் மெய் கூறுவார் யார்?-இறந்தகாலம்
நீயே இவ்வாறு கூறுகின்றபின் வேறு உரைப்பதுண்டோ?
- நிகழ்காலம்

இங்குப் **பின்** என்னும் வினையெச்சம் முறையே இறந்தகாலமும் நிகழ் காலமும் காட்டியமை அறிக.

(ஆ) மருந்து உண்ணாமுன் நோய் தீர்ந்தது - இறந்தகாலம்
நோய் வருமுன் காக்க - நிகழ்காலம்
இங்கு **முன்** இறந்தகாலமும் நிகழ்காலமும் காட்டிற்று.

(இ) வணங்கி நாம் விடுத்தக்கால்- இறந்தகாலம்
அகன்றவர் திறத்தினி நாடுங்கால் - நிகழ்காலமும் எதிர்காலமும்

இங்குக் கால் இறந்தகாலம். நிகழ்காலம், எதிர்காலம், ஆகிய மூன்றும் காட்டிற்று.

(ஈ) தொடர் கூரத்தூவாமை வந்தக்கடை - **கடை** என்பது இறந்தகாலம் உணர்த்திற்று.

(உ) உரைத்தவழி, உரைக்கும் வழி -- மூன்று காலமும் உணர்த்திற்று உரைக்கும் வழி என்பது நிகழ்வும், எதிர்வும் உணர்த்தும், எனவே முக்காலமும் கொள்க.

(ஊ) உரைத்தஇடத்து, உரைக்கும் இடத்து-இடத்து என்பது முக்காலமும் காட்டும். உரைக்கும் இடத்து என்பது நிகழ்வு எதிர்வு இரண்டையும் காட்டும்.

மேலே கூறப்பட்ட ஆறு வினையெச்ச ஈறுகளும் காலம் காட்டும் போதுதான் வினை எச்சங்களாகும்-பிற இடங்களில் வேறாக வரும். இந்த ஆறும் இதற்கு முந்திய சூத்திரத்தில் கூறப்பட்ட ஒன்பதும் ஆகிய பதினைந்தும் வினை எச்சங்களாம்.

சூத்திரம் 230

அவற்றுள்
முதல்நிலை மூன்றும் வினைமுதல் முடிபின

(ப.ரை.) அவற்றுள்-மேற்சூத்திரங்களில் கூறப்பெற்ற பதினைந்து வினையெச்சங்களுள், முதல்நிலை-முதலில் நிற்கும், மூன்றும்-முதலில் நிற்கும் செய்து, செய்யூ, செய்பு என்னும் மூன்று வினைஎச்சங்களும், வினைமுதல் முடிபின-வினை முதல்-வினை கொண்டு முடியும்.

செய்து, செய்யூ, செய்பு என்னும் மூன்று வாய்பாட்டு எச்சங்களும் வினைமுதலின் (எழுவாய் (அ) கர்த்தாவின்) வினைமுற்றுக் கொண்டு முடியும்.

(வி.ரை.) வினைமுதல்-எழுவாய்,கர்த்தா,வினைசெய்வோனுக்குரிய வினை முற்றால் முடியும்

(எ.டு) உண்டு வந்தான் - உண்டு என்பது செய்து என்னும் வாய்பாட்டு எச்சம். அது வந்தான் என்னும் வினை முதல்வனின் வினைமுற்றால் முடிந்தது.

உண்ணூ வந்தான் - உண்ணூ என்பது செய்யூ என்னும் வாய்பாட்டு எச்சம்.

உண்குபு வந்தான் - உண்குபு என்பது செய்பு என்னும் வாய்ப் பாட்டு எச்சம். இம்மூன்று வினை எச்சங்களும் கர்த்தாவின் வினைமுற்றால் முடிந்தன.

சூத்திரம் 231

அம்முக் கிளவியும் சினைவினை தோன்றின்
சினையொடு முடியா முதலொடு முடியினும்
வினையோர் அனைய என்மனார் புலவர்

(ப.ரை) (அ) முக்கிளவியும்-(செய்து,செய்யூ,செய்பு) ஆகிய மூன்று வாய்பாட்டு வினையெச்சங்களும், சினை வினை தோன்றின் - சினைக்குரிய வினை நின்று, சினையொடு முடியா- அச்சினைக்குரிய வினையோடு முடியாமல், முதலொடு- வினை முதலுக்குரிய (கருத்தாவுக்குரிய) வினைமுற்றுடன் முடிந்தாலும், வினை ஓர் அனைய-வினையால் ஒரு தன்மையினவாம், என்மனார் -என்று கூறுவர், புலவர்-இலக்கண அறிஞர்.

செய்து. செய்யூ. செய்யு என்னும் மூன்று வாய்பாட்டு வினையெச்சங்களும் தத்தம் சினை வினைகளோடு முடியாமல், வினை முதலுக்குரிய வினையோடு முடிந்தாலும், சினைவினைகளோடு முடிந்தனவாகவே கருதப்படும். ஏனெனில், சினை என்பது வேறாகாமல் முதற்பொருளின் கூறாகவே நிற்பதொன்றாம்.

(வி.ரை) அ-அந்த. முக்கிளவி-செய்து,செய்யூ,செய்பு என்னும் மூன்று சொற்கள். சினை - உறுப்பு, அங்கம், முதல்-முதற்பொருள், மரம் - முதற்பொருளானால், கிளை அதன் சினைப் பொருளாம், கிளை முதற்பொருளானால் அதன் இலை சினைப் பொருளாகும். எனவே முதலும் சினையும் ஒரு பொருளே அன்றி வெவ்வேறு பொருள்கள் ஆகா. அதனால் மேலே கூறிய வாய்பாட்டு வினை எச்சங்கள் வினையெச்சங்களுக்குரிய வினைகளோடு முடியாமல், முதற்பொருளின் வினைகளோடு முடிந்தாலும், அவையும் சினை வினைகளோடு முடிந்தனவாகவே கருதப்படல் வேண்டும்.

என்ப என்னும் சொல் மன், ஆர் இரண்டு விகுதிகளையும் பெற்று என்மனார் என வந்தது. புலவர் - இலக்கணப்புலவர்

(எ.டு) கண்ணன் கையிற்று வீழ்ந்தான்-இத்தொடரில் இற்று என்னும் வாய்பாட்டு எச்சம் வீழ்ந்தது என்றும் தன் வினை முற்றுக் கொள்ளாமல் வினை முதலாகிய கண்ணனுக்குரிய உயர்திணை வினைமுற்றாகிய வீழ்ந்தான் என்பதனோடு முடிந்தமைகாண்க. இற்று-ஒடிந்து.ஒடிந்து வீழ்ந்தது கை ஆகையால் வீழ்ந்தான் எனக் கருத்தாவின் வினை கொண்டு முடிந்தாலும் சினைவினையோடு முடிந்ததாகவே கொள்ளல் வேண்டும். இவ்விதி உயர்திணைக்கே உரியது.

(தொடரும்)

ஆசாரக் கோவையில் வாழ்வியல் நெறிகள்

பேரறிஞர் சா. கிருட்டிணமூர்த்தி

அறிவியல் என்பது அறிவு சார்ந்தது. அறிவிற்கு அப்பாற்பட்டது எதுவும் அறிவியலாக இருக்கமுடியாது. நம் முன்னோர் பெற்றிருந்த அறிவியல் உணர்வு அனுபவ அளவின்பாற் பட்டதாகும். நமக்கு முன்னோர் தெரிவித்த கருத்துகளையும் தாம் கண்டுணர்ந்தவற்றையுமே அவர்கள் தெரிவித்துச் சென்றுள்ளார்கள். மனித இனம் வழிதவறிச் செல்லும் போது அவர்கள் காட்டிய நன்னெறிகளும், அவர்கள் கூறிச்சென்ற அறக்கருத்துகளும், தத்துவங்களும் அம்மனித இனத்தை நன்னெறியில் செலுத்தும் வல்லமையுடையவாக விளங்குகின்றன.

நம்முடைய பழைய இலக்கியங்கள் பலவும் நாம் பின்பற்ற வேண்டிய ஒழுகலாறுகளை ஆங்காங்கே அறிவியல் நோக்கோடு சுட்டிச் சென்றுள்ளன. அவை செய்யத்தகுவன, செய்த்தகாதன என விதிகளாக அமைந்துள்ளதைப் பேரளவில் காணலாம். இது மட்டுமன்றி எடுத்துக்காட்டுகளாகவும், வாழ்வியல் நடைமுறைகளாகவும் கூறப்பட்டுள்ளமையும் காணமுடியும். சான்றிற்கு ஒன்றைக் கூறலாம். "நூற்றுலா மண்டபம்" என்ற தொடருக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், "உண்டால் நூறடி உலவுதல் வேண்டுமென்று மருத்துவநூல் கூறியதனைக் கூறினார்" என உடல் நலம் மற்றும் கட்டடக்கலை தொடர்புடைய கருத்தை விளக்குகின்றார். உணவு உண்டபின் சிறிது தொலைவு நடந்தால் உடல் நலத்திற்கு நல்லது என்ற அறிவியல் உண்மையை இவ்விலக்கியச் செய்தியில் ஏற்றிக் கூறியிருப்பதை நாம் காணமுடிகிறது. இவ்வகையில் அமைந்த இலக்கியங்களுள்ளும் நீதி இலக்கியங்கள் ஒழுகலாறுகளைச் சுட்டுதற்காகவே எழுந்தனவாகும். அவை சுட்டும் கருத்துகளை வெறும் போதனைகள் என்று மட்டும் கொள்ளுதற்கில்லை. இக்கருத்துகள் பேரளவில் இறை மற்றும் சமயச் சார்புடையவையாகக் காணப்பட்டாலும் தனிமனித மேம்பாடு, சமூக மேம்பாடு ஆகிய இரண்டையும் ஒருங்கிணைக்கும் நோக்கிலேயே கூறப்பட்டுள்ளன. இன்றைய அறிவியலாளர்கள் பெரிதும் கூறும் உடல் நலப்பாதுகாப்பு, பொதுநலம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்னும் இன்றியமையாக் கூறுகளை எடுத்துரைக்கும் நோக்கிலேயே அக்கருத்துகள் அமைந்துள்ளன.

இவ்வகையில் பதினென்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய ஆசாரக்கோவை அறநூல்களுள் ஒன்றாகும். இந்நூலின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார் என்பவராவார். ஆசாரம் குறித்த கருத்துகளைத் தொகுத்துக் கோவையாகக் கூறியதால் இதற்கு ஆசாரக்கோவை என்று

பெயர். இதற்கு மூலநூல் ஆரிடம் என்ற வடமொழி நூலென இந்நூலின் பாயிரம் எடுத்துக் கூறுகின்றது. முந்தையோர் கண்டமுறை, யாவரும் கண்டநெறி, பேரறிவாளர் துணிவு, நல்லறிவாளர் துணிவு என இந்நூலுள் காணப்படும் வாழ்வியல் நெறிகள்,

தனிமனித வாழ்வு
சமூக வாழ்வு
சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்

என்ற மூன்று கூறுகளாகக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

நல்லொழுக்கம் தேவை :

தனிமனிதனாயினும், சமுகமாயினும் நல்லொழுக்கமே வாழ்வின் அடிப்படையாகும். ஒரு சமுகம் நல்லொழுக்கமுடையதாக மலரவேண்டுமெனில் தனிமனித வாழ்வு நல்லொழுக்கமுடையதாக அமையவேண்டும். தனிமனித நல்லொழுக்கமென்பது அவனது அன்றாட வாழ்க்கைமுறை, வெளியுலகில் பிறரோடு சார்ந்து வாழும் தன்மை ஆகியவற்றில் அவன் மேற்கொள்ள வேண்டிய நெறிகளையும் தவிர்க்க வேண்டிய செயல்களையும் சுட்டுவதாகும். நல்வாழ்விற்கு நல்லொழுக்கம் தேவையென்பதைத் தமிழில் அனைத்து இலக்கியங்களும் வலியுறுத்தினாலும் ஆசாரக்கோவை, அத்தகைய நல்லொழுக்கத்தால் விளையும் பயன்களைப் பட்டியலிட்டுக் காட்டுவது சுட்டத்தக்கதாகும்.

" பிறப்பு, நெடுவாழ்க்கை, செல்வம், வனப்பு
நிலக்கிழமை, மீக்கூற்றம்,கல்வி, நோயின்மை
இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்" (ஆசாரம்.1)

பிறப்பு-(நற்குடிப்பிறப்பு), நல்ல சந்ததி, நீண்ட ஆயுள், செல்வம், உடல் நலத்தால் உண்டாகும் அழகு, உரிமையுடைமை, தலைமைப்பண்பு, கல்வி மேன்மை, நோயற்ற வாழ்வு ஆகிய எட்டும் நல்லொழுக்கத்தின் பயன்களாகக் கூறப்பட்டுள்ளன. ஆழ்ந்து நோக்கினால், இங்குக் கூறப்பட்ட ஒவ்வொன்றுமே உடல் நலப்பாதுகாப்போடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதைக் காணமுடியும். நல்ல உடல் நலம் ஒன்றினால் மேற்கூறப்பட்ட எட்டையும் பெறமுடியும். நல்ல உடல்நலத்தை நல்ல ஒழுக்கங்களைக் கடைப்பிடிப்பதனால் மட்டுமே பெற வாய்ப்புண்டு. இதனால் அனைத்து நூல்களும், அனைத்துச் சமயங்களும், மட்டுமன்றி அறநெறியாளர்களும் நல்லொழுக்கத்தை வலியுறுத்தி வந்துள்ளனர். இவ்வாறு வலியுறுத்தப்படும் நல்லொழுக்கம், தீயொழுக்கம் எனும் இரண்டு பாகுபாட்டில் தீயொழுக்கம் தவிர்க்கப்பட வேண்டியதாகவும் செய்யத் தகாததாகவும் மீண்டும் மீண்டும் கூறப்படுவதைக் காணும்பொழுது

தீயொழுக்கத்தைத் தவிர்த்தல் நல்வாழ்விற்கு அடிப்படையாகும் என்பதை உள்ளுறுத்திக் கூறுவதாகவே கொள்ளலாம். இத்தீயொழுக்கங்கள் அறிவியல் அடிப்படையில் உடலுக்கும் உள்ளத்திற்கும் தீங்கு விளைவிப்பன என்பதை உணர்ந்தே அவற்றைக் கூறியுள்ளனர் என்று கொள்ளலாம்.

1. தலையில் தேய்த்த எண்ணெயைப் பிற உறுப்புகளில் தடவக்கூடாது (ஆசாரம் 12)

இம்முறை ஒரு பழக்க அடிப்படையில் வந்த ஒன்றாக இருந்தாலும், சிந்தித்துப் பேணத்தக்கதாகவுள்ளது. 'சனி நீராடு' என்பது ஔவை மொழி. சனிக்கிழமைதோறும் எண்ணெய் தேய்த்துக்குளி என்பது இதன்பொருள். உடலில் ஏற்படும் வெப்பத்தைப் போக்குவதற்காகவே நம் முன்னோர் எண்ணெய் தேய்த்துக் குளித்து வந்தனர். நம்முடைய மரபு மருத்துவமும் நோய்தீர்ப்பதற்கு எண்ணெய்ப்பூச்சு மருந்துகளைக் கொண்டிருந்தது என்பதிலிருந்தும் இதனை உணரலாம். உடலின் வெப்பம் தலைப்பகுதியில் அதிகமாகக் காணப்படும். வெயிற்காலங்களில் வெப்பத்தின் கொடுமைக்கு ஆளாகும் உறுப்பும் தலைதான்; எனவே தலையில் எண்ணெய் தேய்த்துக்கொள்வதால் உண்டாகும் மிகுதியான வெப்பத்தில் தோய்ந்த எண்ணெயை உடம்பில் தேய்த்துக்கொள்வதால் உடம்பின் பிறபகுதிகளுக்கும் இவ்வெப்பம் சேரக்கூடும் என்பதை உணர்ந்தே அவ்வாறு கூறினர் என்றுகொள்ளலாம்.

2. ஒருவர் உடுத்தி அழுக்கேறிய ஆடையை மற்றவர் அணியக்கூடாது (ஆசாரம் 12,36,41)

உடம்பிலுள்ள வெப்பம், மற்றும் நோய்க்கிருமிகளுக்கு மேற்போர்வையாக ஆடைகளை அணிந்துகொள்கிறார்கள். உடல் வெப்பம் வியர்வையின் மூலம் வெளியாகி அக்கிருமிகள் ஆடைகளில் படிந்து விடுகின்றன. அவ்வாறு படிந்த நோய்க்கிருமிகளுக்குப் புகலிடமான ஒருவரின் ஆடையை மற்றொருவர் அணியும் தீய பழக்கத்தினால், முன்னவருக்கு உள்ள தோல்வியாதிக் கிருமிகள் அனைத்தும் பின்னவருக்கு வந்து சேர்வதில் வியப்பொன்றும் இல்லை.

ஒரு குடும்பத்தில் ஒருவருக்குள்ள தோல்வியாதி குடும்பத்திலுள்ள அனைவருக்கும் பரவும் என்பதை இன்றைய மருத்துவர்கள் கண்டறிந்து கூறுவதையும் இங்குச் சுட்டிக் கூறலாம். விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு ஒரே மாதிரியான தோல்நோய் வருவதையும் இதனால் ஒருவர் உடுத்திய ஆடையை மற்றவர் உடுத்தக்கூடாது எனத் தோல் நோய்

மருத்துவர்கள் (Darmotologist) இன்றும் கூறிவருகின்றனர். இவற்றின் அடிப்படையில் தான் ஆசாரக்கோவையும் இதேகருத்தை அறிவியல் உணர்வு வெளிப்படும் வகையில் கூறியுள்ளதாகக் கருதலாம். இனியாவது இதனை நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

3. ஒருவருடைய செருப்பை மற்றவர் அணியக் கூடாது (ஆசாரம் 12)

நம்முன்னோர்கள் மரத்தால் ஆகிய செருப்பை அணியக் கற்றுக் கொண்டிருந்தனர். உடல் வெப்பத்தை வெளிப்படுத்தவும் வெளி வெப்பத்தை உள் வாங்கவும் கூடிய உடலுறுப்புகளுள் பாதங்களும் அடங்கும். பாதங்களில் அணியப்படும் செருப்புக்களிலும் மேற்கூறியவாறே ஒருவருடைய உடல் நோய்க் கிருமிகள் மற்றும் கால்ஆணி போன்ற குறிப்பிட்ட நோய்க்கிருமிகளும் இருக்கக்கூடும். எனவே ஆடைகளுக்குக் குறிப்பிட்டதைப் போலப் பிறச் செருப்புக்களையும் அணிந்து கொள்ளக் கூடாது என்பதையும் இன்றைய அறிவியல் சார்ந்த அறிவுரையாக நாம் கொள்ளவேண்டும்.

3. இரவு நேரத்தில் மரத்தின் கீழ் தங்குதல் கூடாது (ஆசாரம் 13)

இதுவும் ஓர் அறிவியல் சார்ந்த கூறாகும். மரம், செடி, கொடிகள் இரவு நேரங்களில் 'கார்பன்-டை-ஆக்ஸைடு' அதிகம் வெளியிடும் என்பது அறிவியல் உண்மை. இதனால் இரவு நேரத்தில் மரத்தின் கீழ் இருந்தால் கார்பன்-டை-ஆக்ஸைடின் காரணமாக மூச்சுத் திணறல் போன்றவை ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, மரத்தின் கீழ் இரவு நேரத்தில் தங்குதல் கூடாது என்பது அறிவியல் உணர்வு வெளிப்பட முன்னோர் கூறி வைத்துள்ளனர்.

இதைப்போன்றே ஒற்றைத் தனிமரத்தின் கீழ் நிற்கக் கூடாது (ஆசாரம் 57) என்பதையும் கூறிச் சென்றுள்ளார். குறிப்பாக மின்னல், இடியுடன் மழைபெய்யும் காலத்தில் ஒற்றை மரத்தின் கீழ் நிற்கக் கூடாது என்பதை இன்னும் கிராமங்களில் வாழும் மக்கள் அறிந்து கூறியும் வருகின்றனர். மழைக்காலங்களில், மின்னல் இடியின்போது உண்டாகும் மின்சாரம் தனித்து உயர்ந்து நிற்கக் கூடிய மரம், கோபுரம் போன்றவற்றின் வழியாக நிலத்தை வந்தடைகிறது. இதனால் மரத்தின் கீழ் நிற்பவர் மீது மின்சாரம் தாக்கி அவர் இறக்கவும் நேரிடும். எனவே தான் இன்னும் உயர்ந்த கோபுரங்களின் மீது இடிதாங்கிகள் வைக்கப்படுகின்றன. இதையே இன்று சமயம் சார்ந்த நம்பிக்கையாகவும் மக்கள் ஏற்று நம்பி வாழ்ந்து வருவதையும் காண முடிகின்றது. மேலும், ஒற்றை மரத்தைச் சேர்ந்திருப்பது உளவியல் அடிப்படையில் உள்ளத்தைப் பாதிக்கும் செயலாகவும் அமையும்.

4. காலில் ஈரத்தோடு சாப்பிட வேண்டும்; ஆனால், காலில் ஈரத்தோடு படுக்கைக்குச் செல்லக்கூடாது.

நம்முன்னோர் சாப்பிடச் செல்லும் போது கைகால்களைக் கழுவிவிட்டுச் செல்ல வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்துள்ளனர். இது கைகால்களைச் சுத்தம் செய்ய வேண்டும் என்ற தூய்மை நோக்கத்தின் அடிப்படையில் எழுந்ததாக இருக்கலாம். ஒரு முதியவரைப் பார்த்து காலில் ஈரம் இருக்கும் போது சாப்பிட வேண்டும் என்று வலியுறுத்தப்படுவது ஏன் எனவும், இரவில் ஒரு முதியவரைப் பார்த்து காலில் ஈரம் இருக்கும் போது சாப்பிடவேண்டும் என்று வலியுறுத்தப்படுவது ஏன் எனவும், இரவில் தூங்கும் போது காலில் ஈரம் காய்ந்திருக்கவேண்டும் என்று கூறப்படுவது ஏன் எனவும் வினவிய போது, அவர் கூறிய பதில் எனக்கு வியப்பைத் தந்தது. காலில் ஈரம் இருக்கும் போது உணவு உண்டால், உண்ட உணவு உடன் செரித்துவிடும் என்றும், இரவில் தூங்கும் போது ஈரம் இருந்தால், நச்சுப் பூச்சிகள் கடிக்கும் போது அவற்றின் நஞ்சு விரைவில் உடல் முழுவதும் பரவும் என்றும் கூறினார். இதனை இன்றைய மருத்துவர்கள் ஆய்ந்து காணவேண்டும்.

5. நின்று கொண்டும், நடந்து கொண்டும் சாப்பிடக்கூடாது (ஆசாரம் 23)

உணவு உண்ணும் போது தரையில் அமர்ந்து உண்ணுவதை நம் முன்னோர் வழக்கமாகக் கொண்டிருந்தனர். இன்றைய விரைவு உலகில் அமர்ந்து உண்ணுவது கால விரயத்திற்கு வழிவகுக்கும் என்று கருதி நடந்து கொண்டும் நின்றுகொண்டும் உண்டு வருகின்றனர். இது உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். நாம் நின்று கொண்டிருக்கும் போது நம்முடைய உடல் உறுப்புகள் புவியீர்ப்பு விசைக்கு ஆட்படுகின்றன. இந்நிலையில் நாம் உண்ணும் உணவின் எடை நம் வயிற்றைச் சென்றடையும் போது புவிஈர்ப்பு விசையின் வேகத்திற்கேற்ப வயிற்றுப் பகுதி கீழ்நோக்கித் தள்ளப்படலாம். நின்று உணவு உண்பதைத் தொடர்ந்து பழக்கமாக மேற்கொண்டுவரும் நிலையில் வயிற்றுப் பகுதியின் கீழ் நோக்கிய விசை வேகத்தின் காரணமாகக் குடலிறக்கம் போன்ற நோய்கள் வருவதற்கும் வாய்ப்புண்டு. உணவை நன்கு மென்று, சுவைத்துப் பொறுமையாக உண்ண வேண்டும் என்று மருத்துவர்கள் வலியுறுத்துவதையும் நாம் இங்குச் சுட்டிக் காட்டலாம்.

6. இல்லறத்தில் கடைப்பிடிக்க வேண்டியவை:

இல்லறத்தில் மனைவியின் மாதவிடாய்க் காலத்தில் அவளோடு உடலுறவு கொள்ளக் கூடாது என்பது நம் முன்னோர் நெறி. அதனால் தான் அந்த நாள்களில் அவளைத் தனித்து இருக்க வைத்தனர். ஏனென்றால் அக்காலங்களில் உடலுறவு கொண்டு அதனால் பிறக்கும் குழந்தை உடற்குறையுடன் பிறக்கும் என்பதையும் அவர்கள் கண்டறிந்திருந்தனர். இதனைத் தொல்காப்பியம் எடுத்துக் கூறுகின்றது.

> *"பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்*
> *நீத்தகன்றுறையார் என்மனார் புலவர்"*
>
> *(தொல். பொருள். அன் பு. 46)*

பூப்பு தோன்றிய மூன்று நாளும் கூட்டமின்றி அணுக இருந்து அதன் பின்னர்ப் பன்னிரண்டு நாளும் கூடியிருக்க வேண்டும் என்பது இந்நூற் பாவின் பொருள். முதல் மூன்று நாளும் புணர்ச்சி கூடாது என்பதற்கு உரையாசிரியர்கள் காரணம் கூறுகின்றனர். முதல் நாளும், இரண்டாம் நாளும் புணர்வதால் கருத்தோன்றினால் அக்கரு வயிற்றி லேயே அழிந்து விடும் என்றும், மூன்றாம் நாள் புணர்வதால் கருத் தோன்றினால் அது குறைவாழ்வுடையதாகும் என்றும் கூறி அதனால் மூன்று நாளும் கூடுதல் கூடாது என்று கூறினார். மேலும் உடலியல் நோக்கில், புணர்தல் என்பது இருவருக்குமே உகந்ததாக அமையாது என்பதையும் இங்குச் சுட்ட வேண்டும். இதனையே

> *"தீண்டா நாள் முந்நாளும் நோக்கார் நீராடியபின்*
> *ஈராறுநாளும் இகவற்க என்பதே*
> *பொறியாளர் துணிவு"* (ஆசாரம் 212)

என ஆசாரக்கோவை கூறியுள்ளதைக் காணலாம். இதுமட்டுமின்றி,

உடலுறவுக்கு ஆகாத நேரம் என்று சிலவற்றை இந்நூல் பட்டியலிட் டுக் காட்டுகின்றது. உச்சிப்பொழுது, நள்ளிரவு, காலை நேரம், அந்தி நேரம், சிவராத்திரி, திருவோணம், பௌர்ணமி, அட்டமி ஆகிய பொழுதுகள் ஆகர்த பொழுதுகளாகக் கூறப்பட்டுள்ளன (ஆசாரம் 43). உடலியல் மற்றும் உளவியல் நோக்கில் பார்த்தால் இப் பொழுதுகள் எவ்வளவிற்குப் பொருந்துவனவாக இல்லையென்ப தையும், பல்வேறு பாதிப்புகளைத் தரும் என்பதையும் நன்கு உய்த் துணரலாம்.

7. பரத்தையரைப் பார்க்கவே கூடாது.

ஒருவனுக்கு ஒருத்தி என்னும் உயர்வாழ்க்கை இன்று சமுதாய நோக்கிலும், உடலியல் நோக்கிலும், மருத்துவ நோக்கிலும் பெரிதும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. பரத்தமை ஒழுக்கம் ஒன்று தான் 'எயிட்ஸ்' (AIDS) என்னும் உயிர்க்கொல்லிக்குக் காரணம் என்பது இன்று உலகளவில் பேசப்பட்டு வருகின்றது. பரத்தமையை ஒதுக்கினால் 'எயிட்ஸை' விரட்டலாம். இதையெல்லாம் எதிர்நோக்கித்தான் அன்றே பரத்தமை ஒழுக்கத்தைப் பலரும் கடிந்து வந்தனர். ஆசாரக்கோவை இவ்வொழுக்கத்தை வன்மையாகக் கண்டிக்கிறது. பரத்தையர் தொடர்பு கூடாது என்று கூறாமல், பரத்தையரைப் பார்க்கவே கூடாது என்பதும் அவ்வில்லத்தில் அருகில் குடியிருக்கக் கூடாது என்பதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாகக் கூறப்பட்டுள்ளன.

"மின்னொளியும் வீழ்மீனும் வேசையர்கள் கோலமும்
தம்மொளி வேண்டுவார் நோக்கார்" (ஆசாரம் 51)

"நிறுத்த மனமில்லார் சேரியகத்தும்
நிகரில் அறிவினார் வேண்டார்"(ஆசாரம் 55)

" வண்ண மகளிர் இடத்தொடு தம்மிடம்
ஒன்றியம் என்பார் இடங்கொள்ளார்" (ஆசாரம் 82)

என்னும் தொடர்கள் மேற்கருத்திற்குச் சான்றுகளாக அமைகின்றன .

சுற்றுச்சூழல் பாதுகாத்தல்

இந்த நிலவுலகில் நிகழும் அனைத்துச் சீரழிவுகளுக்கும், பெருகிவரும் நோய்களுக்கும் அடிப்படைக் காரணம் சுற்றுச்சூழலைச் சீராகப் பாதுகாக்காததேயாகும் எனச்சுற்றுச்சூழல் அறிவியலாளர்கள் எடுத்துக் கூறுகின்றனர். ஐம்பூதங்கள் என்று சொல்லக்கூடிய நம்மை சுற்றியுள்ள நிலம், நீர், நெருப்பு, காற்று,ஆகாயம் ஆகிய ஐந்தையும் பாதுகாக்க வேண்டும் என்பதே அவர்களின் அறிவுறுத்தலாகும். இதையே ஆசாரக் கோவை தன் உடல் போல் பாதுகாக்கப்பட வேண்டியவற்றுள் ஐம்பூதத்தையும் குறிப்பிட்டுக் கூறுவதிலிருந்து அறியலாம் (ஆசாரம் 15)

இதுமட்டுமின்றி நீரைத் தூய்மையாகப் பாதுகாக்க வேண்டும் என்பதில் நமக்குத் தனிக்கவனம் வேண்டும். ஏனெனில் "நீரின்றி அமையாது உலகு" என்றார் வள்ளுவர். உடம்பில் வரும் அனைத்து நோய்களுக்கும் நீரே அடிப்படைக் காரணம் என்கிறது இன்றைய மருத்துவம். எனவே நீரின் தூய்மை பாதுகாக்கப்படவேண்டும். புனித நீர்களெல்லாம் இன்று எந்த அளவிற்கு மாசுபடுத்தப்படுகின்றன என்பதை நாம் அறிந்து வேதனைப்படுகிறோம். அதனால்தான் ஆசாரக்கோவை, நீரில் உமிழக்கூடாது என்பதை ஒரு நல்லொழுக்கமாக எடுத்துக்கூறுகின்றது. (*ஆசாரம் 14*) இதையே பிறிதோரிடத்தில் *நீருள் வாய்க்கொப்பளிக்காமல்* நீரை மொண்டு வெளியில் கொப்பளிக்க வேண்டும் என்றும் கூறுகின்றது. (ஆசாரம் 35)

வெளிக்காற்று தூய்மையடையவும், மழை தொடர்ந்து பெய்யவும் மரங்கள் பாதுகாக்கப்படுவது இன்றியமையாததாகும். எனவே மரங்களை வளர்த்துக் காடுகளைப் பெருக்குவதில் இன்றைய அறிவியல் உலகம் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றது. மரங்களை வெட்டிக் காடுகளை அழிப்பதைத் தண்டனைக்குரியதாகவே அரசும் கருதி வருகின்றது. நன்னிகழ்வுகளில் மரம் நடுதலை வழக்கமாகக் கொண்ட நாம், அதே நிகழ்வுகளில் யாரும் மரம் வெட்டாதிருக்க வேண்டும் என்பது நாடு தழுவிய அளவிலும் வற்புறுத்தலாம். இதை முன்பே ஆசாரக்கோவை எடுத்துக் கூறுவதைக் காணலாம். பௌர்ணமி நாளிலாவது மரம் வெட்டாதிருங்கள் என்பதைக் குறிப்பாகச் சுட்டுகிறது.

*"**நிறையுவா மரங்குறையா என்பவே** " (ஆசாரம் 17)*

இவைபோன்று அறிவியல் சார்ந்த வாழ்வியல் நெறிகள் பல ஆசாரக்கோவையுள் சுட்டப்பட்டுள்ளன. அவற்றுள் கொள்வனகொண்டு நம் வாழ்க்கை செம்மையானதாகவும் வளமுடையதாகவும் நல்லொழுக்கம் சார்ந்ததாகவும் அமைத்துக் கொள்ள நாம் முயல்வோமாக.

பதிற்றுப்பத்தின் பாடற்பெயர்கள்

பேரறிஞர் அ.மா. பரிமணம்

சங்கத் தொகை நூல்கள் அனைத்தும் அகம், புறம் என்னும் பெரும் பகுப்பினுள் அடங்குவனவாயினும், தமக்கேயுரிய தனிச்சிறப்புக் கொண்டவையாகத் திகழ்கின்றன. எட்டுத்தொகை நூல்களுள் இடம் பெறும் பதிற்றுப் பத்தின் பத்துப் பத்துக்களும் தனித்தனியாகப் பத்துச் சேர மன்னர் மீது பாடப்பட்டனவாகும். ஒவ்வொரு பத்தும், அதன் ஆசிரியர் பாடிய பாடல்கள் பலவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது ஆகாமல், ஒரு மன்னன் மீது ஒரே சமயத்தில் இயற்றப்பெற்று அந்த அரசன் முன் பாடப்பட்டதுமாகும் என்பதனை, நான்காம் பத்தின் பாடல்கள் அந்தாதியாக அமைந்திருப்பது கொண்டு அறியலாம். சங்க காலப் புறப்பாடல்கட்குத் திணை, துறை கூறும் மரபிற்கு மாறாக, இந்நூலின் பாடல்களின் கீழே, துறை மட்டும் கூறியிருப்பது எண்ணத்தக்கது. பாடல்கள் அரசனின் வீரம், கொடை முதலிய பண்புகளைச் சுட்டிப் பாடப்படுவதனைக் கருத்தாகக் கொண்டமையால், அதற்கு வாய்ப்பாகப் புலவர்கள் பாடாண்டிணை ஒன்றனையே தேர்ந்து பாடுவாராயினர். முதற்பத்தும் இறுதிப்பத்தும் கிடைக்காமையால், அவற்றில் இடம் பெற்றிருக்கக்கூடிய திணை விளக்கம் கிடைக்காது போயிற்று. எனினும், "இப்பதிற்றுப்பத்து நூறும் இவ்வாறே வருதலின் பாடாண்டிணையாயிற்று" என்று பேராசிரியர் தம் தொல்காப்பிய உரையில் (தொல். பொருள். புறம் 25) கூறுவதனால், இந்நூற்பாடல்கள் அனைத்தும் பாடாண்திணை வகையின என்பதும், அதனால் பாடல்தோறும் திணைக்குறிப்புக் கூறப்படவில்லை என்பதும் உறுதிப்படுகின்றன.

இவ்வகையில், இந்நூல், "ஒருதிணைக் கோவை" யாக அமைந்து, பிற்கால, "ஒருதுறைக் கோவை" போலும் சிற்றிலக்கியத்திற்கும், பதிற்றுப்பத்து அந்தாதி எனும் சிற்றிலக்கியத்திற்கும் முன்னோடியாக உள்ளது. இந்நூற்பாடல்கள் தோன்றிய காலத்தினை அடுத்துத் தோன்றிய, இதன் பதிகங்கள், பண்டைச் சேர வேந்தர் வரலாற்றறைக் கருவூலமாகத் திகழ்தலோடு, இடைக்கால மெய்க்கீர்த்திகளின் தோற்றத்திற்கு அடிப்படையாகவும் விளங்குகின்றன.

இந்நூலின் அடிக்குறிப்புச் செய்திகளுள் பிற சங்க நூல்களில் காணாத வகையில், பாடல்தோறும் பாடற்பெயர் ஒன்று பொறிக்கப்பட்டிருப்பது சிந்திக்கத்தக்கது. புறம், குறுந்தொகை போன்ற தொகைகளில், பாடலாசிரியர் பெயர் அறியப்படாத பாடல்கள் சிலவற்றிற்கு, அப்பாடலிற் காணும் ஓர் அரிய தொடரால், அதன் ஆசிரியர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதனைக் காணலாம். தொடித்தலை விழுத்தண்டினார், ஓரேருழவர்,

கல்பொருசிறுநுரையார், தனிமகனார் என்றிங்ஙனம் காணப்படும் பெயர்கள் அவ்வகையில் அமைந்தனவாகும். பாடலின் பெருமையுணர்ந்த, நயங்கண்டு, இன்புற்ற மக்கள் (தொகுத்தவர்கள்) அப்பாடற்படைப்பாசிரியரை, அவரது இயற்பெயரறியா நிலையிலும், நினைவுகூர்ந்து போற்றுதற்கு மேற்கொண்ட உத்தியே இவ்வாறு பெயரிட்டமைக்குக் காரணமாகும். இதனால், சங்க காலப் படைப்பின் நலமுணர்ந்து போற்றும் புலமக்களின் பண்பையும் அவர்தம் நன்றியுணர்வையும் உணர்தல் கூடும்.

பத்துப்பாட்டில் இடம்பெறும் குறிஞ்சிப் பாட்டிற்கு, 'வஞ்சி நெடும்பாட்டு' என்றொரு பெயர் கூறப்படுவதுண்டெனினும், அப்பெயர், பாடலாசிரியர் பெயர் அறியப்படாமையால் அமைந்த பெயராகாது. 'குறிஞ்சிப் பாட்டு' என்னும் பெயர்தானும், ஒரு காலத்தில் ஓரிடத்தில் மலரும் இயல்பில்லாத, பல்வேறு மலர்களைத் தலைவியும், தோழியும் கொய்து குவித்தனர் என்பதனால், கட்புலனாகும் குறிஞ்சிநில ஒளிச்சிறப்பினை உணர்த்தும் வகையாலும், அறத்தொடு நிலை எனும் குறிஞ்சி ஒழுக்க வகையாலும் அமைந்ததாகும். அந்நூலின் இறுதியில் இடம் பெறும் நெடும்பாடல் பொருள் வகையால், கூத்தராற்றுப்படை எனக் கூறுதற் கொத்ததாயினும், அங்ஙனம் கூறப்படாது, "மலைபடுகடாஅம்" என்று கூறப்பட்டிருப்பது எண்ணத்தக்கது. மலைவழிச் செலவு, கட்புலனுக்கு இன்பம் நல்கும் காட்சிகள் பலவற்றைக் கொண்டதாயினும், செவிப்புலனால் உணரத்தக்கனவும், நுண்மையும் பருமையும் கொண்டு விளங்குவனவுமாகிய பல்வேறு ஓசைகள் மிகுந்திருப்பதனைச் சிறப்பாகப் பெற்றிருப்பதால் அவ்வோசையினை, உருவக வகையான் உணர்த்தும் 'மலைபடுகடாஅம்' என்னும் தொடர் பாட்டின் பெயராயது சிறப்புடையதாகும். 'மலைபடுகடாஅம்', 'குறிஞ்சிப்பாட்டு' ஆகியவற்றை ஆழ்ந்து நோக்குவோர், அவை நுட்பமான ஒளி, ஒலிக்காட்சிகளை உணர்த்தும் பாங்கினை உணர்ந்து இன்புறக் கூடும்.

பாடலாசிரியர் பெயர் அறிந்த நிலையிலும், பதிற்றுப்பத்தின் ஒவ்வொரு பாடலுக்கும், அதிலமைந்த ஒரு தொடரால் பெயர் அமைக்கப்பட்டு, அக்குறிப்பில் துறை, வண்ணம், தூக்கு ஆகியவற்றின் பின்னர்ச் சேர்க்கப்பட்டிருப்பது சிந்தனைக்குரியதாகின்றது. இப்பாடல்கள் பிற புறத்திணைப் பாடல்கள் போல உதிரிப் பாடல்களாக அல்லாமல், அரசவையில் தனித்தனிப் பத்துக்களாக ஆக்கப்பெற்றுப் பாடப்பட்டுள்ளமையால், அச்சிறப்புக்கருதி, அப்பெருமை விளங்கப் பாடலின் ஒரு தொடரால் பெயர் கூறப்பட்டிருக்கலாம். இதனையும், ஒவ்வொரு பத்ினுக்கும் அதனைக் கேட்ட மன்னன் உவந்தளித்த பரிசிலினையும் நோக்கும் போது, சேர மரபினர் சிலர் மீது இயற்றப்பெற்ற இப்பாடல்களின் ஏற்றத்தை நன்கு உணர்தல் கூடும். இதனால் அக்கால

மன்னர் மாட்சியும், புலவர் பெருமையும், தமிழ்க்கவிதைக்கிருந்த தனிச்சிறப்பும் நன்கு விளங்குவதோடு, 'புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின் வலவன் ஏவா வானவூர்தி, எய்துப என்ப தம் செய்வினை முடித்தே' என்னும் முதுமொழியினை உணர்ந்து புரவலர்கள் செயற்பட்ட பாங்கினையும் உணரமுடிகின்றது.

பிறிதொரு சங்கத் தொகை நூலான பரிபாடலின் செய்யுள் ஒவ்வொன்றின் கீழும், அதனை இயற்றியோர் பெயர், அதற்கு இசையமைத்தோர் பெயர், அதற்குரிய பண்ணின் பெயர் ஆகியன குறிக்கப்பட்டுள்ளன. பரிபாடற் செய்யுட்கள், செப்பல் முதலிய ஓசைவகையான் அமையும் வெண்பா முதலிய செய்யுட்கள் போலாது, இசை (பண்) சார்ந்தனவாகலின், அக்குறிப்புக்கள் அப்பாடல்களை இசைத்துப் பயில்வோர்க்கு இன்றியமையாவாதலின் அக்குறிப்புக்களைக் கொடுத்திருப்பது பயன்மிக்கதாகும். பாடியோர் இசையமைத்தோர் பெயர்களை நோக்குங்கால், அக்காலத்தில் புலவர்களுள் இயற்றிறம் மிக்காரும், இசைத்திறம் மிக்காரும் தனித்தனி இருந்துள்ளனர் என்பதனையும், இருதிறனும் ஒருங்கே பெற்ற புலவர்களும் இருந்துள்ளனர். (கேசவனார் 14) என்பதனையும் உணரமுடிகின்றது. மேலும், பண் கனிந்த இசைப்பாடல்களை இசையுடன் பயில்வது சிறந்தது என்பதனையும் உணரலாம். இவ்வகையில் பதிற்றுப்பத்தின் பாடல்களுக்கு, அவற்றின் தொடர்களால் பெயர் குறிப்பிட்டதன் பயன் யாது என்று எண்ணிப் பார்ப்பது தக்கதாகும்.

பொதுவாகக் காணுங்கால், அப்பாடற் பெயர்கள் தனித்தனிச் சேர மன்னர் மீது, அரசவையில் பாடப்பட்ட புகழ்ப் பூந்துணர்களாக அமையும் பெருமை பெற்றவை என்பதனைக் காட்ட இடப்பெற்ற பெயர்களேயாகும் என்பது தவிர, வேறு வகையில் பயன்பட்டனவாகத் தெரியவில்லை. நச்சினார்க்கினியர் தம் தொல்காப்பியப் பொருளதிகார உரையில், பதிற்றுப்பத்தின் சில பாடல்களையும் பாடற்பகுதிகளையும் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார். அங்ஙனமின்றிப் பாடல் முழுவதையும் காட்டா மல், அதன் தொடக்கத் தொடரை மட்டும் காட்டி அது பற்றிய தம் குறிப்பினைக் கூறியுள்ள இடமும் அவருரையில் உண்டு. எடுத்துக்காட்டாக, 'விசையந்தப்பிய' என்னும் பதிற்றுப்பத்து ஈகை கூறிற்று" என்பதனைக் குறிப்பிடலாம் (*தொல். பொருள். புறம் 20 உரை*). இன்று கிடைத்துள்ள பதிற்றுப் பத்தின் எண்பது பாடல்களில், 'விசையம் தப்பிய' என்னும் தொடக்கமுடைய பாடல் இன்மையால், அது மறைந்த இருபது பாடல்களுள் ஒன்றாய் இருத்தல் வேண்டும். கிடைத்துள்ள பாடல்களின் பெயர்கள் அனைத்தும், பெயர் சுட்டும் தொடர்களாக உள்ளனவேயன்றி, ஒன்றுகூட, எச்சத்தொடராக அமையவில்லை. 'விசையம் தப்பிய' என்னும் தொடர் எச்சத் தொடராக இருத்தலால் அது, பாட்டின் பெயராக அமைதல் இயலாது.

நச்சினார்க்கினியர் பதிற்றுப்பத்தின் ஒரு முழுப்பாடலைக் குறிப்பிட நேர்ந்த போது, அதற்குள்ள பெயரைக் குறிக்காமல், பிற தொகை நூற்பாடலுக்கு முதற்குறிப்பையும் சுட்டினால், ஏற்படக்கூடிய மயக்கத்தைத் தவிர்ப்பதும், பாடலைச் சுட்டும் நெறியில் ஒருமைப்பாட்டினைப் பேணலும் உரையாசிரியரின் கருத்தாக இருந்திருக்கலாம். எவ்வாறாயினும், பதிற்றுப்பத்தின் பாடலுக்குப் பெயர் சூட்டப்பட்டதன் சிறப்பினைப் பின்வந்த புலவர்கள் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை.

பதிற்றுப் பத்திற்குப் பெயர் அறியப்பெறாத ஆசிரியர் ஒருவரால் எழுதப்பெற்ற பழைய உரை ஒன்றுள்ளது. அது, புறநானூற்றின் பழைய உரை போல் பதவுரையாகவோ, சிலப்பதிகார அரும்பதவுரை போல மிகவும் சுருங்கியதாகவோ அமையாமல், இடைப்பட்டதாய், ஆங்காங்கே கருத்துக் கூறுவதாய், பொருள் முடிவு சுட்டுவதாய் அமைந்திருப்பதோடு, பாடற் பெயர் ஒவ்வொன்றிற்கும் தவறாது காரணங் கூறுவதாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பாடற்குப் பெயர் வகுத்தோர் நோக்கம் எதுவாயினும், அப்பெயர்க்குத் தாம் கருதும் காரணத்தைத் தவறாமல் எழுதிச் சென்றிருப்பதனை, உரையாசிரியர் தம் கடமை எனக் கூறலாமாயினும், அது இக்காலத் திறனாய்வோர்தமக்கு ஒரு முன்னோடியாக, செவிநுகர் கனிகளாய் செய்யுட்களைத் துய்க்க முயல்வோர் தமக்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ்வதனை உணரலாம். இவ்வகையின் பாடற்பெயர் வகுத்தோரும், அதற்குக் காரணம் காட்டியவரும் செய்யுட்சுவை தேரும் தமிழ்த் தும்பிகளின் போற்றுதலுக்கு உரியவராகின்றனர்.

பதிற்றுப்பத்தின் எண்பது பாடல்களையும் நிரல்படுத்திக் கண்டால் அவை இயற்கை, வீரம், வள்ளன்மை ஆகியவற்றை உணர்த்தும் வகையில் தெரிவு செய்யப்பட்டுள்ளதனை உணரலாம். அப்பாடல்கள் அனைத்தும் புறப்பொருள் பற்றிப் பாடாண்டிணையினவாக இருப்பதனால், அவற்றின் பெயர்களில் அகப்பொருட்சுவை உணர்த்தும் பாங்கில் அமைந்தவற்றை மிகுதியாகக் காணுமாறில்லை. பொதுவாகச் சங்க காலத்தில், அரசு ஒரு நாட்டினையோ நாட்டின் பகுதியையோ ஆட்சி புரிந்ததற்கான குறிப்பு எதுவும் அக்கால நூல்களில் காணப்படவில்லை. அரசியல் நிகழ்வுகளின் போது, அரசனுடன் அரசி உடனிருந்ததற்கான குறிப்பாகச் "சிறந்த, குவளை உண்கண் இவளினும் பிரிக" என்று கூறிய ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியனின் வஞ்சின உரைப்பகுதியில் இடம் பெற்றுள்ள 'இவள்' என்னும் அண்மைச் சுட்டுச் சொல்லினைக் கருதலாம். இறந்த கணவனோடு உயிர் துறக்க முற்பட்ட அவள் மனைவியை (பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு) மக்கள் "செல்கெனச் சொல்லாது ஒழிக என" விலக்கியது (புறம் 246-2) அவள் வாழ்ந்து நாட்டை ஆள்வதற்காக அன்று என்பதனையும், மன்னன் இறந்த நிலையில் அரசியையாவது கண்டு ஆறுதல் கொள்ளலாமே என்னும் ஏக்க உணர்வினால் இரங்கி வேண்டப்பட்டது

என்பதனையும் உணர்தல் வேண்டும். அதனால், 'இத்தகைய மாட்சியுடையவள் கணவன்' என்று சார்பு வகையாலேயே அரசியின் கற்பு மாட்சியும் எழில் நலனும் புனையப் பெறும்.

கற்பு வாழ்வில் கணவன் மனைவியரிடையே முகிழ்க்கும் ஊடல், அவர்களின் இயற்பெயர் அறியப்படாத நிலையில் அகப்பொருளாகவும், அப்பெயர் அறியப்பட்ட நிலையில் புறப்பொருளாகவும் கொள்ளப்படும். ஆறாம்பத்தின் தலைவனான ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் மனைவி கணவன்பாற் கொண்ட ஊடலை அப்பத்தின் அசிரியர் நயம்படக் காட்டியுள்ளார். அச்சேரமன்னன், மகளிர் ஆடும் துணைங்கையில் நாட்டமுடையவனாய், அவர்கள் ஆடுகையில் தலைக்கை தரூஉம் இயல்பின்னாய் விளங்கியதனை ஒரு பாடலிலும் (பதிற். 51) அந்நிலையிற் கண்ட அவன் மனைவி ஊடல் கொண்டதனைப் பிறிதொரு பாடலிலும் (பதிற். 52) அப்பத்தின் ஆசிரியர் காக்கை பாடினியார் குறிப்பிட்டுள்ளார். இரவில் விளக்கொளியில், துணங்கையாடும் மகளிர்க்குப் புணையாகத் தலைக்கை தந்து வந்த தன் கணவனொடு மாறுபட்டவளாய் அரசி, சினந்து, நடுக்குற்றுத் தன் சுரத்துள்ள 'சிறு செங்குவளை' மலரை வெறுப்புடன் வீச முற்பட்ட நிலையில், அவள் கணவன் ஊடல் தணிக்கும் வகையில் அதனைப் பெற இருகையேந்தி, ஈயென இரந்து நிற்கின்றாள். அந்த சிறு செங்குவளையைத் தான் நினைத்தபடி அவன் மேல் எறிந்தாலும், அவன் விரும்பியபடி கையில் கொடுத்தாலும் அச்செயல் ஊடல் தணிதற்காம் வாயிலாகலாம் எனக் கருதி அவ்வாறு செய்யாமல், விரைந்து 'நீர் எனக்கு யார் ஆவாய்' என்று உரைத்து நிற்க, அவளிடமிருந்து அம்மலரைப் பெறமுடியாத மெல்லியனாக விளங்கினான்' என்று புலவர் காட்டியுள்ளார். ஊடற் குறிப்புணர்த்தும் பாங்கில் இடம்பெற்ற 'சிறு செங்குவளை' என்னும் தொடர் நயமிக்கதாக அமைந்தமையின் அதனை அப்பாடலின் பெயராகத் தேர்ந்தெடுத்துள்ளமை நினைந்து மகிழ்தற்குரியதாகும். அப்பாடலில் பெயராகத் தேர்தற்குரியனவாய்ப் 'பெருங்கலிவங்கம்', 'மாயிரும் பஃறோல்', 'தொலையாத்தும்பை', 'சுடர்ழ்ந்த பாண்டில்' போன்ற பல தொடர்கள் அப்பாடலில் இருப்பவும், அரசன் அரசியர்பால் தோன்றிய ஊடலை நயம்படப் புலப்படுத்தும் 'சிறு செங்குவளையைத் தேர்ந்தது தேர்ந்தோரின் திறத்திற்குக் கட்டியம் கூறுவதாக உள்ளது.

பாடல்கள் சிலவற்றின் பெயர்களை நோக்குவது பயன்மிக்கதாகும். தொடர்ந்த குவளை என்பது ஒரு பாடலின் (பதிற்.27-2) பெயர். குவளை நீர்ப்பூ வகையது என்பதனையும், மகளிர் தம்மை அணிசெய்யும் மலர்களுள் ஒன்றாக அதனைக் கொள்வர் என்பதனையும் பலரும் அறிவர். குவளைத் தாவரம் நின்ற நீர்நிலை வற்றிக் காய்ந்தாலும், காய்ந்த சேற்றில் அதன் கிழங்கு அமிழ்ந்து கிடந்து பின்னர் நீர் நிறைந்த காலத்தில் வித்திட

வேண்டாது செடியாக வளர்ந்து மலரும் தன்மையது; நீர்நிலை சுனை போன்று வற்றா இயல்பினதாயின் தொடர்ந்து பருவகாலத்தில் மலரும் இயல்புடையது. இயற்கையின் இச்சிறப்பினை உணர்ந்து அதனைப் புலப்படுத்தும் வகையில் 'தொடர்ந்த குவளை' என்னும் தொடர் பாட்டின் பெயராய்க் கொள்ளப்பட்டது. இந்தச் சிறப்பு "ஆண்டுகள் தோறும் இட்டு ஆக்க வேண்டாது தொண்டு இட்டதே ஈடாக, எவ்வாண்டிற்கும் இடையறாது தொடர்ந்து வரும் என்றவாறு. இச்சிறப்பானே தொடர்ந்த குவளை என்று பெயராயிற்று" என்று பழைய உரையாளரால் விளக்கப்பட்டுள்ளது. 'பூத்த நெய்தல்' என்பது ஒரு பாடலின் (பதிற்.13-3) பெயர். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனால் அழிக்கப்பட்ட பகைவர் நாட்டின் பண்டை வளங்கூறுங்கால் புலவர் இந்தத் தொடரைப் பயன்படுத்தியுள்ளார். நெய்தலும் நீர்ப்பூவகைதான். கரும்பு விளைந்துள்ள வயலின் பாத்தியில் அதற்கு வேலியாக நெய்தல் அமைந்து, செழித்து மலர்ந்துள்து. கரும்பினை உண்ணும் வேட்கை கொண்டு வந்த எருமைகள் நெய்தல் மலர்களையே போதவுண்டு, வேட்கை தீர்ந்தபின் திரும்பிவிட்டன. நெய்தல் கரும்பிற்குக் காவலாக அமைந்து காத்து என்ற கருத்தில் "கரும்பின் பாத்தி பூத்த நெய்தல், இருங்கண் எருமையினிரை தடுக்குநவும்" என்று கூறுகின்றார். "நெய்தலானது அக்கரும்பு முதலாய மற்றோரிரையின் பாங்கரிற் செல்லாது தன்னையே நின்று தின்னும்படி தான் போதவுண்ட எருமை நிரையைத் தடுக்கும் இடங்கள். இச்சிறப்பானே இதற்குப் பூத்த நெய்தல் என்று பெயராயிற்று" எனப் பழைய உரைகாரர் விளக்குகின்றார். மேலே காட்டிய இயற்கை பற்றிய உவமை இரண்டனுள் முன்னது, இயற்கையின் வளமும் எழிலும் பற்றியதாகவும், பின்னது இயற்கையின் வளமும் பயன்பாடும் பற்றியதாகவும் அமைந்த பெயர்களாகத் திகழ்கின்றன.

'கயிறு குறு முகவை' என்பதும் (பதிற்.22), 'கமழ்குரல் துழாஅய்' (பதிற்.31) என்பதும், இரு பாடல்களின் பெயர்களாகும்; இயற்கையை விளக்கும் அடிப்படையில் அமைந்தனவாகும். கொங்கு நாட்டில் புன்செய் எனும் வன்னிலப்பகுதி மிகுதி. பண்டு அங்குப் பயிர்த்தொழில் புரிந்தவர்கள், அரிதின் முயன்று அகன்ற பரப்பில் மிகவும் ஆழமாகக் கிணறு தோண்டி, அங்கிருந்து கிடைக்கும் சிறிய அளவு நீரைப் பயன்படுத்திப் பயிர்த்தொழில் புரிந்தனர். சிறிய நீர்ச்சாலில் நெடிய கயிற்றினைக் கட்டிக் கிணற்றுட் செலுத்தி, மேலே இழுத்து நீரைப் பெற வேண்டும். கிணற்றின் அடித்தளப் பாறைப்பகுதியினை உடைத்து, அதன் இடையே சிறிய அளவில் ஊறும் நீரினையே, நீர்ச்சால் முகந்து கொள்ள, நெடிய கயிற்றினை மேலே இழுத்துப் பெறும் அந்நீர்ச்சாலின் சிறிதளவு நீரை ஆண்டுள்ள ஆனிரைகள் நீரருந்த மொய்த்துச் சூழும். பெரும் முயற்சியில் சிறிதாய் நீர்பெறுங் காட்சியினைச் "சிரறு சில ஊறிய நீர்வாய்ப் பத்தல் கயிறு குறு முகவை மூயின மொய்க்கும் ஆசெழு கொங்கர்" என்று புலவர்

காட்டியுள்ளார். உரையாளர், "தன்னால் நீர் வாங்குவது பெரிதன்றித் தன் கயிற்றையே நின்று வாங்கப்படும் முகவை" என விளக்கி, அதனால் கயிறு குறுமுகவை என்பது பாட்டின் பெயராயிற்று எனக் குறிப்பிட்டுள்ளார்.

திருவனந்தபுரத்துத் திருமாலைக் குறிக்க நேர்ந்தபொழுது, ஆசிரியர் காப்பியாற்றுக் காப்பியனார், "கண்பொருதிகிரிக் கமழ்குரல் துழாஅய் அலங்கற் செல்வன்" என்று கூறியுள்ளார். 'கண்ணைப் பறிக்கும் ஒளிமிக்க சக்கரப் படையையும், மணம் வீசும் கொத்துக்களையுடைய துளசி மாலையையும் கொண்ட திருமால்' என்பது இதன் பொருள். இதில் இடம்பெற்ற 'கமழ் குரல் துழாஅய்' என்னும் தொடர் பாடலின் பெயராகக் கொள்ளப்பட்டுள்ளது. இதனைப் பழைய உரையாளர், "நாறாத பூவுடையதனை மிகநாறுவதொன்று போலச் சாதி பற்றிச் சொன்ன சொற்சிறப்பான் இதற்குக் 'கமழ் குரல் துழாஅய்' என பெயராயிற்று என விளக்கந் தந்துள்ளார். துளசியின் பூ மணமுடையதன்று எனக் கருதிய பழைய உரையாசிரியர், 'பூ வென்னும் சாதி பற்றிச் சொல்லப்பட்டது' என்று அமைதி கூறும் பாங்கில் தந்த விளக்கத்தை உடன்படாது, டாக்டர் உ.வே.சா. ஐயரவர்கள், "நக்கலர் துழாஅய் நாறினர்க் கண்ணியை" (பரி.4-58) எனத் துழாஅய்ப் பூங் கொத்து மணமுடையதென்று கூறுவதனால் இவ்வுரை சிறப்புடையதாகத் தோன்றவில்லை" எனக் கருத்துக் கூறியுள்ளார். துளசியின் பூ மிகமிகச் சிறியது அதற்கென மெல்லிய மணமும் உண்டு. துளசியின் இலையும், காம்பும் மிகுந்த மணமுடையவை. அந்த மணத்தால், அதன் சிறிய பூவின் மணத்தைத் தனியே நுகருமாறில்லை. அதனால் அப்பூவிற்கு மணமில்லையென்று உரையாளர் கருதியிருக்கலாம். மேலும் அதனால், அப்பெயரின் காரணமாக, பூவென்னும் சாதி ஒருமையால் மணமுடையதாகக் கூறினார் போலும் என்று அமைதி காட்டியுள்ளார். வில்வம் சிவனுக்கும் துழாய் திருமாலுக்கும் உரியன என்பதனைப் பலரும் அறிவர். இரண்டின் மலர்களைத் தேடிப் பெற்றுப் பூசைக்குப் பயன்படுத்துவதில்லை. இரண்டன் இலைகளே அருச்சனைக்கும் அலங்காரத்திற்கும் ஏற்றனவாகும். கமழ்மலர் என்னாது 'கமழ்குரல்' என்றதனை நோக்கினால் துழாய் இலை, காம்பு, குரல்(கதிர்) ஆகியவற்றால் மணம் தருவதனை உணரலாம். குரல் என்பது மலர் பொருந்தும் கதிரைக் குறிக்கும். இவற்றை உளங்கொண்டு நோக்கினால் பழைய உரையாசிரியர் வேறு வகையில் காரணம் கூறியிருக்கலாம் என்பது போதரும்.

புண்ணுமிழ்குருதி(11), மெய்யாடு பறந்தலை (35), ஒண் பொறிக் கழற்கால் (34) போன்ற பெயர்கள் போர்க்களக் காட்சியும் போர் வீரர்தம் வீரப்பண்புகளையும் புலப்படுத்துவனவாகவுள்ளன. இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன், தன் பகைவரொடு கடலிடத்தே போர் புரிந்த போது, பகை வீரர்களின் மார்பினைப் பிளந்தமையால், சுழியிலுள்ள நீரின் நீலநிறம் மாறி,

செந்நிறமுற்று மனாலக் கலவைபோல ஆகியது என்னும் கொடிய போர்க் களக் காட்சியை, 'அருநிறம் திறந்த புண்ணுமிழ் குருதியின் , மனிநிற இருங்கழிநீர்நிறம் பெயர்ந்து, மனாலக் கலவை போல " என்று குமட்டூர்க் கண்ணனார் குறிப்பிட்டுள்ளார். இப்பெயரை விளக்கும் உரையாசிரியர், "அருநிறம் திறந்த என்னும் முன்வந்த அடைச்சிறப்பானும், "மணிநிற .... மனாலக்கலவைபோல" எனப் பின்வந்த அடைச்சிறப்பானும் இதற்குப் புண்ணுமிழ்குருதி என்று பெயராயிற்று" என விளக்கியுள்ளார். போரின் கொடுமை உணர்த்திக் காண்போரையும் கருதுவோரையும் உளம் நடுங்கச் செய்யும் காட்சி இது;

பகைவர் படைகள் தலைமயங்கி வாட்போர் புரிகையில், தலை வெட்டுண்டு கவந்தமாய் நிற்கும் உடல்கள் கீழே விழுமுன்னர்த் தம் கைவாளைத் திரிந்து ஆடினவாம். இறந்து பட்டோர் உதிரம் பெருகிய நிலையில் அக்களம், அந்திவானத்தைப் போலச் சிவந்து காணப்பட்டதாம். இதனை வருணிக்கும் இடத்தே கண்ட 'மெய்ஆடு பறந்தலை' என்னும் தொடரினைப் பாடற்பெயராகக் கொண்டுள்ளனர். அதன் காரணத்தை உரையாசிரியர், 'குறையுடல் எழுந்தாடுவது ஒரு பெயருடையார் பலர்பட்டவழியன்றே: அவ்வாற்றாற் பலர் பட்டமை தோன்றக் கூறிய சிறப்பான், இதற்கு மெய்யாடு பறந்தலை என்று பெயராயிற்று' என்று குறிப்பிட்டுள்ளார். போரில் வென்ற வீரர்கள் தம் வெற்றியைப் புலப் படுத்தும் வகையில் காலில் கழல் அணிந்து கொள்வர். அது வீரக்கழல் எனப்படும். சிலர் நாம், இன்னவிடத்தே இவ்வாறு பொருது வென்றோம் என்பதனை உணர்த்தும் வகையில் அக்கழலில் அவ்வீரச்செயல்களைப் பொறித்துக் கொள்வதுமுண்டு. களங் காய்க்கண்ணி நார்முடிச்சேரலின் வீரர் அவ்வாறு பொறித்த வீரக்கழலை அணிந்திருந்தமையினை இப்பெயர் உணர்த்துகின்றது. 'தாங்கள் செய்த அரிய போர்த் தொழில்களைப் பொறித்தலையுடைய ஒள்ளிய கழல்' என்று விளக்கிப் பெயர்க் காரணம் கூறப்பட்டுள்ளது. 'ஒண்பொறிக்கழற்கால்' என்னும் தொடர் பதிற்றுப்பத்தின் இரு பாடல்களில் (19, 34) இடம்பெற்றாலும், பின்னர் அமைந்த பாடலுக்கே (34) பெயராகக் கொள்ளபட்டுள்ளது. முன்னர் அமைந்த பாடலில் (19), 'வளனறு பைதிரம்' என்னும் தொடர் பொருளால் சிறந்து நிற்றலின் ஆண்டு இத் தொடரைப் பெயராகக் கொள்ளவில்லை. இது போன்ற காட்சிகள், போரில்லாத உலகினை, அமைதி நிலவும் உலகினைக் காண விரும்பும் மக்களுக்கு வேண்டாக் காட்சிகளாக-வெறுப்பூட்டும் காட்சிகளாகக்-காணப்பட்டாலும், வெற்றிப் புகழினையே பெரும் புகழாகக் கருதிய வீரயுகப் பாடல்களில் வீரர்களும் வேந்தர்களும் விரும்பும் காட்சிகளாயின என்பது ஒருதலை.

ஆறாம்பத்தில் இடம்பெறும், 'ஒல்லார் யானைகாணின், நில்லாத்தானை இறை கிழவோயே' (511:16,17) என்னும் பகுதியிலுள்ள

நில்வாத்தானை' என்னும் தொடர் அப்பாடலின் பெயராகக் கொள்ளப்பட்டுள்ளது. படை(தானை)யின் வீரத்தைக் கூறுவதன் வாயிலாக, ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் பெருவீரம் புலப்படுத்தப்படுகிறது. அவ்வேந்தனின் படை, எதிரியின் காலாட்படையினைக் கண்டால், அது தனக்கு நிகரானதன்று என்று கருதி, அதனைக் கழித்து நின்று, பகைவர்தம் யானையைக் கண்டால் நில்லாது' அதன் மேல் செல்லுமாம். அச் சிறப்பால் 'நில்லாத்தானை' என்பது பாட்டின் பெயராயிற்று என்று பழைய உரையாசிரியர் விளக்கம் தருவர். அப்பாடல் இறுதியில், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கைபாடினியார் நச்செள்ளையார் 'இறை கிழவோயே' என்று விளிக்கின்றார். அதனை உரையாசிரியர், "இறைகிழவோய்" என்று இறைவனாதற்றன்மை யுடையாய் என்றவாறு" என விளக்கியுள்ளார். *இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு மகனாகப்* பிறந்தமையால் மட்டுமல்லாமல், வீரம் முதலிய பண்புகளைப் பெற்றுள்ளமையாலும் 'இறை' (அரசன்-தெய்வம்) யாதற்தகுதி உடையவனாக ஆடுகோட்டுப்பாட்டுச் சேரலாதன் திகழ்ந்தான் என்பது கருத்து.

பாடாண்டிணையில், மன்னனின் வீரச்சிறப்பினை ஒப்பக் கொடைச் சிறப்பும் பாராட்டப்பட்டுள்ளமையால், அதனைப் புலப்படுத்தும் தொடர்கள் பல, பாடல்களின் பெயர்களாகக் கொள்ளப் பெற்றுள்ளன. பதிற்றுப்பத்து மன்னர்களின் கொடைப் பெருமையினை அந்நூலின் பதிகங்கள், படிப்பவர்கள் நம்புதற்குத் தயங்கும் வகையில் புலப்படுத்துகின்றன. அவை அனைத்தும் மெய் வாசகங்கள் என்பதனைப் பாடல்களில் இடம்பெறும் தொடர்கள் விளக்குவனவாகவுள்ளன. இளஞ்சேரல் இரும்பொறையினைக் கூறுங்கால், அவனது கொடைச் சிறப்பினையும், வீரச்சிறப்பினையும் ஒருங்கே புலப்படுத்தும் வகையில், 'பாடுநர், கொளக் கொளக் குறையாச் செல்வத்துச் செற்றோர் கொளக் கொளக் குறையாத்தானை (82:12;13) கொண்டவன் என்று பெருங்குன்றூர் கிழார் பாடியுள்ளார். இளஞ்சேரலுக்குக் கூறப்பட்ட இச்சிறப்பு, பொதுவாகப் பதிற்றுப்பத்துச் சேரர் அனைவருக்கும் பொருந்துவதாகும். அவர்கள் பெருஞ்செல்வம் பெற்றுப் பெருங் கொடைஞர்களாக விளங்கியதால் அவர்கள், 'பரிசிலர் வெறுக்கை' என்று பாராட்டப் பெற்றனர். இத்தொடர், இமயவரம்பன் நெடுஞ்சேரமலாதனையும் (15-21), களங்ககாய்க்கண்ணி நார்முடிச்சேரலையும் (38-9), செல்வக்கடுங்கோவாழியாதயையும் (65-11) குறிக்கும் வகையில் அவர்களைப் பற்றிய பாடல்களில் இடம்பெற்றுள்ளது. எனினும் 38ஆம் பாடலில் உள்ள இத்தொடர் அப்பாடற் பெயராகக் கொள்ளப்பட்டுள்ளது.

‘பரிசிலர் வெறுக்கை’ என்பது ‘பரிசிலர் வாழ்வென்றவாறு’ என்று விளக்கமும் காரணமும் கூறப்பட்டுள்ளது. ‘பகை வரிடத்துத் கொள்ளப்பட்ட மாக்களை வரையாது அளவிறக்கக் கொடுக்கும் பாசறை இருக்கை’ என்று ‘மாசிதர் இருக்கை’ என்னும் 76ஆம் பாடற்பெயர் விளக்கப்பட்டுள்ளது.

‘அருவி ஆம்பல்’ என்னும் தொடர் நூலின் மூன்றிடத்தில் (65-17;63;19;71;2) வந்துள்ளது. இத்தொடர் 65,71 ஆம் பாடல்களில் அருவியில் மலர்ந்த ஆம்பல் என்னும் பொருள்பட, 63ஆம் பாடலில், ‘வீ அரிய ஆம்பல்’ அஃதாவது ஆம்பல் என்னும் பேரெண்ணின் பெயரைக் குறிப்பதாக உள்ளது. அச் சிறப்பு நோக்கி அது பாடற்பெயராகக் கொள்ளப்பட்டது. ஐந்தாம் பத்தில் ‘ஏறு ஏணி’ (43;33) என்னும் பெயர், வெளிப்படை வகையால், ஏறப்படாத ஏணியை அஃதாவது கோக்காலியை உணர்த்தும் தன்மையால் அது பாடப் பெயராகக் கொள்ளப்பட்டது.

கூந்தல் விறலியர் என்பது ஒரு பாடலின் (18-6) பெயராகும். பெரிய அளவில் விருந்தோம்பல் நிகழ்ந்தபோது, ‘வந்தார்க்குச் சோறு கடிதின் உதவுதற் பொருட்டு, அடுப்புத் தொழிற்கு உரியரல்லாத வரிசை மகளிரும் அடுப்புத் தொழிலிலே வழங்குக’ என்று ஏவப்படுகின்றனர். விருந்தோம்பற் பண்பாட்டுச் சிறப்பால் அத்தொடர் அப்பாடலின் பெயராயிற்று.

இவ்வாறு பதிற்றுப்பத்தின் பாடற்பெயர்களை ஆராய்ந்தால் அவை அம்மன்னர்களின் வீரம், கொடை, வெற்றி, பண்பாடு போன்றவற்றை உணர்த்தும் பாங்கில் கூறப்பட்டிருப்பதை உணரலாம்.

உலகில் தோன்றிய பண்டை நாகரிகங்கள் பலவற்றுள்ளும், தனி மனித வீரமும் சமுதாய வீரமும் சிறப்பாகப் போற்றிப் பேணப்பட்டமையால், அங்கெல்லாம் போர் நிகழ்ச்சிகளும், பகைவர், பகைவர் நாடு ஆகியவற்றின் அழிவுகளும் தவிர்க்க முடியாதனவாகவே இருந்து வந்துள்ளன. பழந்தமிழ் மக்களின் வீரப்பண்பாட்டின் வெளிப்பாடாகப் பதிற்றுப்பத்து அமைந்து, போரையும் அதன் அழிபாடுகளையும் எடுத்துக்காட்டி நின்றாலும், அந்நாளைய மன்னர்கள் அன்பும், அருளும், அவற்றால் கொடைக் குணமும் கொண்டு விளங்கியதனைத் தவறாது காட்டி நிற்கின்றமை அதன் தனிச்சிறப்பாகும்.

முருகப்பெருமானின் அறுமுகப்புனைவு

பேரறிஞர் நிர்மலா மோகன்

முருகு என்பது ஒரு பண்பு. உயர்ந்த பண்புகள் யாவும் முருகு என்ற ஒரு பொதுச் சொல்லால் வழங்கப்பெறும். முருகன் அப்பண்புகள் பலவற்றையும் உடைய பரம்பொருள். சுருங்கக் கூறின் கண்ணிற்கு அழகாக, காதிற்கு நாதமாக, நாவிற்கு அமுதமாக, மூக்கிற்கு மணமாக, உடலுக்கு இனிய பரிசமாக, கருத்திற்கு விருந்தாக, உயிருக்கு உணர்வாக இப்படி எல்லாமாக இருப்பவன் முருகன் என்பர் அறிஞர் ச.தண்டபாணிதேசிகர். இத்தகு பீடும் பெருமையும் நிறைந்த முருகனை

ஒருநாமம் ஓர்உருவம் ஒன்றும் இல்லார்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ

என்று மாணிக்கவாசகர் அருளியது போல் பல நாமங்கள் சூட்டியும் பல உருவங்கள் படைத்தும் இறைவனை வணங்கி வருகிறோம். முருகனின் நாமங்களுள் ஒன்று ஆறுமுகன். ஆறுமுகமும் பன்னிரு கரங்களும் கொண்டவனாக விளங்குவதால் அவன் ஆறுமுகன் எனக் குறிப்பிடப்படுகிறான். காலந்தொறும் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள ஆறுமுகனின் தோற்றப் பொலிவினையும் பன்னிரு கரங்களின் செயற்பாட்டினையும் விளக்கும் வகையில் அமைந்துள்ளது இக்கட்டுரை.

திருமுருகாற்றுப்படையில் அறுமுகப் புனைவு

சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றான திருமுருகாற்றுப்படை முருகப் பெருமானின் அறுபடை வீடுகளைச் சிறப்பித்துப் பாடுகின்றது. அவ் அறுபடை வீடுகளுள் இரண்டாம் படை வீடாகக் குறிப்பிடப்படுவது திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூர். திருச்சீரலைவாயில் முருகப்பெருமான் ஆறுமுகங்களும் பன்னிருகரங்களும் கொண்டவனாகக் காட்சியளிக்கிறான்.

மாயிருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம் ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத் தன்றே ஒருமுகம்
மந்திர விதியின் மரபுவழி வழாஅ
அந்தணர் வேள்வியோர்க் கும்மே ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்

திங்கள் போலத்திசை விளக்கும்மே ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமர் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொரு நகைஅமர்ந் தன்றே

என்று திருமுறுகாற்றுப்படையில் முருகனின் ஆறுமுகப் புனைவு வருணனை அமைகின்றது.

உலகத்து இருளைத் தீர்க்கும் வகையில் பல கதிரை விரித்து உலகம் விளங்கும்படி செய்கிறது ஒருமுகம். சூரியன் சந்திரன் அக்கினி என்னும் மூன்று சுடர்கள் மூலம் உலகத்தின் புற இருளையும் அறியாமை இருளில் அழுந்திக் கிடக்கும் உயிர்களுக்கு ஞான ஒளி நல்குவதன் மூலம் அவற்றின் அக இருளையும் ஒருங்கே நீக்கிட ஒளிதரும் முகம் அது.

இரண்டாம் முகம், வரம் கொடுக்கும் முகம். முருகனை நெஞ்சார நினைந்து உருகி அன்பு செய்யும் ஆர்வலர்க்கு அருள் கூர்ந்து, மகிழ்ச்சிப் பெருக்குடன் வரம் தரும் முகம் அது. 'பக்தர்களுக்கு வாய்த்த பெருமாளே' என்று முருகனைக் குறிப்பிடுவார் அருணகிரிநாதர். மனிதர்களுடைய தூய அன்புக்கு அடிமை. 'அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை'-அவன் என்பதைக் காட்டும் முகம் அது.

மூன்றாம் முகம், அந்தணர் வேள்வியைக் காக்கின்றது. முருகன் தேவசேனாதிபதி; தேவர்களுக்குப் படைத்தலைவன்; சூரபதுமனிடமிருந்து அவர்களைக் காத்தவன்; காக்கின்றவன். உலகத்தில் அந்தணர் வேள்வி செய்யும் பொழுது தேவர்களை அழைத்து அவர்களுக்கு அவியுணவு வழங்குவர். தேவர்களுடைய சுகபோகங்களைத் தம்முடையனவாக ஆக்கிக் கொள்ள அசுரர்கள் முந்துவார்கள். அப்போது தேவர்களுக்குரிய உணவு அவர்களுக்குச் சேர வேண்டும் என்பதை நினைந்து, யாகங்களைப் பாதுகாக்கும் பணியை முருகன் மேற்கொள்கிறானாம். அதனால்தான் அருணகிரிநாதரும், 'அந்தண்மறை வேள்வி காவற்கார' என்று முருகனைப் போற்றுகிறார்.

நான்காம் முகம், நூல்களாலும், ஆசிரியர்களாலும் விளக்கமுறாமல் எஞ்சிய பொருள்களையெல்லாம் சந்திரனைப் போல விளங்கும்படிச் செய்கின்றது. சந்திரன் அறிவுக்கு அடையாளம், அந்தச் சந்திரனைப் போல ஞானத்தைப் பக்குவமடைந்த தொண்டர்க்கு அறிவுறுத்துவது அம்முகம். முருகனை 'ஞான பண்டிதன்' என்று வழிபடுவது பெரியோர் மரபு. சிவபிரானுக்கே மெய்ஞ்ஞான உபதேசம் செய்தமையால் அவன் 'குமரகுருபரன்' என்ற திருநாமத்தைப் பெற்றவன். எல்லா குருக்களிலும் மேலான குரு அவன் என்பதை உணர்த்துகிறது இம்முகம்.

ஐந்தாம் முகம், வீரத் திருமுகம், போர்க்களத்தில் எதிர்த்தவர்களை அழித்து, வெற்றி பெற்றவன் முருகன். அந்தக் களத்தைத் தனதாக்கிக் கொண்டு அங்கே இறந்து கிடக்கும் உடல்களைக் கொண்டு துர்க்கைக்கு வேள்வி செய்வது மரபு. இதைக் 'கள வேள்வி' என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. வெற்றிக்கு அறிகுறியாகக் களவேள்வி செய்கிறது இம்முகம்.

ஆறாம் மூகம் - மகிழ்ச்சியில் திளைக்க வைக்கும் முகம், குறவர் குலத்தைச் சார்ந்த வள்ளியைக் காதல் மணம் புரிந்தவன் முருகன்; வேடருக்கிடையே வளர்ந்தாலும், தன்பால் அன்பு பாராட்டிய திறத்தை நினைந்து தானே வலியச் சென்று அப்பிராட்டியை ஆண்டு கொண்டவன்; குறவர் மடமகளும், கொடி போன்ற இடையை உடையவளுமாகிய மடவரல் வள்ளியோடு இன்புற்று மகிழும் செயலைப் புரிவது ஆறாம் திருமுகம்.

வடமொழி நூல்களில் :

வடமொழி சம்கிதைகள் குறிப்பிடும் அறுமுகங்களின் தத்துவத்தைத் தம் நூலில் விளக்கிச் செல்கின்றார் தண்டபாணிதேசிகர். அவ்விளக்கம் வருமாறு;

"அறுமுகன்: ஆறுமுகங்களுடையவன்; சிற்சக்தியாகிய சிவசக்தியின் வதனம் ஒன்றும், சிவபெருமானுடைய முகம் ஐந்தும் ஆம். இந்த ஆறுமுகங்களும், ஆன்மாக்கள் விருப்பு நிறைவேறும் வண்ணம், திருவருளே காரணமாக இயற்றப்பெறும். படைத்தல் முதலான ஐந்து தொழில் இயற்றுவதற்காக அபேத சித்தியாகிற சிற்சத்தியில் பத்தில் ஒரு கூறு வலியுள்ள மகாசாதாக்கியம் என்னும் தத்துவமும், மகாசாதாக்கிய மூர்த்தியும் பொருந்தின கீழ்நோக்காயுள்ள அதோமுகமும்; பராசக்தியின் பத்திலொரு பங்கு வலியுள்ள சாதாக்கிய தத்துவமும், சதாசிவ மூர்த்தியும் பொருந்தின மேனோக்காகவுள்ள ஈசானமுகமும்; ஆதிசத்தியில் பத்திலொரு கூறான அமூர்த்திசாதாக்கியமும், ஈசன் என்னும் மூர்த்தியும் பொருந்தின மேற்கு நோக்கிய சத்தியோசாத முகமும்; பிரமீசன் என்னும் மூர்த்தியும் பொருந்தின வடக்கு நோக்கியுள்ள வாமதேவமுகமும்; ஞானசக்தியில் பத்தில் ஒரு கூறு வலி கொண்ட கன்ம சாதாக்கியமும், ஈசானன் என்ற மூர்த்தியும் பொருந்தின கிழக்கு நோக்கியுள்ள தற்புருட முகமுமாம். இவைகளே முருகனுக்குரிய முகங்கள் ஆறுமாயின.

சிவனும் சக்தியும் இணைந்த கூறு முருகன் என்பதை இவ்விளக்கம் உணர்த்தி நிற்கின்றது. எனினும் சிவபிரானிடமிருந்து முருகனை வேறுபடுத்தும் வகையில் ஒவ்வொரு திசை நோக்கிய முகமாக இன்றி, ஆறுமுகங்கள் ஒரே வரிசையாக அமைந்துள்ள தன்மையில் தென்னாட்டு ஆறுமுகன் தோற்றமளிக்கின்றான்.

கந்த புராணம் காட்டும் ஆறுமுகன்

'சிவமே முருகன், முருகனே சிவம்' என முருகனின் ஆறுமுகச் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது கந்தபுராணம். கந்தபுராணத்தில், சிவபெருமான், சிவமே முருகன் என உமையம்மைக்கு உபதேசம் செய்வதாகப் பாடுகின்றார் கச்சியப்ப சிவாசாரியார்;

"ஈசனேஅவன் ஆடலால் மதலை ஆயினன்காண்;
ஆசிலாஅவன் அறுமுகத்து உண்மையால் அறிநீ;
பேசில் ஆங்கவன்பரனெடு பேதகன் அல்லன்
தேசுலாவுஅகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்"

"நமக்கு ஐந்து முகம் வெளிப்படையாக இருக்கின்றன. அதோடு கீழ்நோக்கும் அதோ முகம் ஒன்றுண்டு. அந்த ஆறுமுகங்களும் சேர்ந்தே. ஆறு முகங்களாகப் பெற்று நம்முடைய குழந்தை உண்டானான் . நான் வேறு, அவன் வேறு அல்லோம். பஞ்சாட்சரத்தில் ஓம் என் ற பிரணவம் சேர்ந்தால் ஆறு எழுத்து அமையும். அந்த ஆறு எழுத் துக்களே முருகனுடைய ஆறு முகங்களாக வந்தன. அவனைக் குழந் தை என்று எண்ணாதே. நம்மிடத்திலுள்ள எல்லாச் சக்தியும் அவனி டத்தில் உள்ளன. நீயும் நானும் சேர்ந்தவனே அவன் என்று முருகப் பெருமானின் பெருமைகளைச்"சிவபெருமான் எடுத்துக் கூறுவதையும் கந்த புராணம் பிறிதோா இடத்தில் சுட்டுகின்றது:

"ஆதலின் நமதுசத்தி அறுமுகன்; அவனும் யாமும்
பேதகம் அன்றால்; நம்போல் பரிவிலன்; யாண்டும் நின்றான்;
ஏதமில் குழவி போல்வான்; யாவையும் உணர்ந்தான்; சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருள வல்லான்"

நான் ஐந்து திருமுகந் தாங்கி ஐந்தொழிலாற்றும் சதாசிவன்; நீ பலவாறாக இருப்பினும் ஒருமுகமுடைய பராசக்தி; முருகன் இருவர் முகங்களையும் ஒருங்கு கொண்டுள்ள நமது குமாரன். நாமே அவன்' எனச் சம்பவ காண்டத்தின் சுலோகங்கள் கூறுவதாகக் குறிப்பிடுகிறார் தண்டபாணி தேசிகர். 'ஐந்து முகத்தோடு அதோ முகமும் தந்து திருமுகங்கள் ஆறாகிச் செந்தழற்கண் ஆறும், ஒரு முகமாய்த் தீப்பொறி ஆறு உய்ப்ப' எனக் கந்தர்கலி வெண்பாவும் இதனை எடுத்துக் காட்டுகின்றது.

திருப்புகழ் காட்டும் ஆறுமுகம்

திருப்புகழ்ப் பாயிரத்தை அடுத்து அமையும் ஒரு பாடல் இந்த ஆறு முகங்களின் செயல்களையும் புலப்படுத்துகிறது. முருகன் துதியாக வரும் அப்பாடல் வருமாறு;

"ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞான மொழி பேசு முகம் ஒன்றே
கூறும்அடி யார்கள்வினை தீர்த்தமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீஅருளல் வேண்டும்
ஆதிஅரு ணாசலம் அமர்ந்த பெருமாளே"

திருமுருகாற்றுப்படையில் வரும் ஆறுமுகங்களின் புனைவும். திருப்புகழ் காட்டும் ஆறுமுகங்களின் புனைவும் சிறிது வேறுபடுகின்றன. முருகனின் ஆறுமுகங்களுள் ஒரு முகம் உலகத்து இருளைப் போக்கி ஒளி விளங்கு முகம்எனத்திருமுருகாற்றுப்படை குறிப்பிட, திருப்புகழ் அம்முகம் நீலமயில் மீது ஏறி விளையாடும் முகம் எனச் சுட்டுகின்றது. ஒளி தோன்றுகின்ற ஆகாயத்தின் நிறம் நீலம் என்பதைக் காட்டும் வகையில் இவ்வருணனை அமைகின்றது எனலாம்.

செறுநர்த் தேய்த்துச் செல்சமர் முருக்கிக் கறுவுகொள் நெஞ்ச மொடு 'களவேள்வி செய்யும் முகம்' ஒன்று எனத் திருமுருகாற்றுப்படை குறிப்பிட. திருப்புகழோ இச் செயலை இரண்டு முகங்களுக்குரிய செயல்களாகக் குறிப்பிடுகின்றது; மாறுபடுகின்ற சூரபதுமனை அழித்தமுகம் ஒன்று 'என்றும். குன்று வடிவில் நின்ற அசுரனைத் தன் வேற்படையால் அழித்த முகம் ஒன்று' என்றும் திருப்புகழ் குறிக்கின்றது. குன்று வடிவில் நின்ற அசுரன் கிரௌஞ்சாசுரன். சூரபதுமனின் இரு தம்பியருள் ஒருவன் தாரகன் அவனுடைய துணைவன் தான் கிரௌஞ்சாசுரன். அவன் மலை வடிவாக இருந்தான்.'அவன் திடீரென்று எங்காவது மக்கள் வந்து போகிற பாதையை அடைத்துக் ரெண்டு அந்த வழியே வந்தோரத் துன்புறுத்துவான். ஒரு சமயம் அகத்தியர் அந்த வழியாக வந்தபோது அவ்வன் வழியை அடைத்துக் கொண்டு தொல்லை கொடுத்தான் அப்போது அவர் தம்முடைய தண்டத்தாலலர அவனை அடித்துப் பல துவாரங்களை உண்டாக்கினார். 'நீ இப்டியே அமர்ந்த நிலையில் இருப்பாயாக. இவ்வழி வருபவர்கள் இந்தத் துவாரத்தின் வழியாக உள்ளே பூகுந்தால் அவர்களுக்குத் துன்பம் கொடுப்பாய். அந்தரப் பழிபாவங்கள் உன்னைச் சாரும். கடைசியில் முருகப் பெருமான் வந்து உன்னை அழிப்பான்' என்றுசாபம் கொடுத்துவிட்டுப் போனவர் அந்தக் கிரௌஞ்ச மலையில் தாரகன் மாயாபுரி அன்னும் நகரை உண்டாக்கி ஆண்டுவந்தான். தாரகனை எதிர்க்கச் சென்ற வீரவாகுதேவரும். மற்ற தேவர்களும். அசுரனின் மாமாயச் செயலால் கிரௌஞ்ச மலைக்குள் நுழைந்து மயக்கமடைந்தனர்; அவர்களை விடுவிப்பதற்காக முருகப் பெருமான் தாரகாசுரனை எதிர்த்தார்; இறுதியில் தம் வேற்படையை விடுத்துத் தாரகனையும் கிரௌஞ்சனையும் வதைத்துத் தேவர்களைச் சிறைவீடுசெய்தார். இப்புராலணச் செய்தியினையே திருப்புகழ். 'குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே' எனப் பாடுகின்றது. திருப்புகழில்

'முருகன்துதியாக அமையும் இப்பாடலைக் கந்தபுராணத் தாக்கத்தின் விளைவாகக் கொள்ளலலாம்.

திருமுருகாற்றுப்படை குறிப்பிடும் 'அந்தணர் வேள்வியைக் காக்கும்' முகத்தைத் திருப்புகழ்ப்பாடல் குறிப்பிடவில்லை. இப்பாடல் திருப்புகழில் அமைந்திருந்தாலும் யாரால் பாடப் பெற்றது என்ற குற்ப்பு இல்லை. அதனால் அந்தண்மறை வேள்வி காவற்கார என்று முருகப் பெருமானைப் பாடும் அருணகிரிநாதர் இப்பாடலைப் பாடவிலைரலை என்றும். பின்னால் வந்தவர்கள் யாரேனும் பாடியஇடைச்செருகல் பாடலலாக இது இருக்கலாம் என்றும் துணியலாம்.

கந்தர் கலிவெண்பா காட்டும் ஆறுமுகம்

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த குமரகுருபரர், தம் 'கந்தர் கலி வெண்பா'வில் முருகப் பெருமானின் ஆறு திருமுகங்களையும் பன்னிரு கரங்களையும் சிறப்பித்துப் பாடுகின்றார்.

"வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூரனைத் தடிந்து
தெவ்வருயிர் சிந்தித் திருமுகமும்-எவ்வுயிர்க்கும்
ஊழ்வினையை மாற்றி யுலவாத பேரின்ப
வாழ்வுதருஞ் செய்ய மலர்முகமும்- சூழ்வோர்
வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்குங் கமல முகமும்-விருத்தகலாய்
பாச இருள்துரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச் மலர்வதன மண்டலமும்-நேசமுடன்
போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோக மளிக்கு முகமதியும்-தாகமுடன்
வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளும் தெய்வமுகத் தாமரையும்"

என ஆறு முகங்களைப் புனைகின்றது கந்தர் கலி வெண்பா. 'வேள்வி காக்கும் முக'த்தைக் குமரகுருபாரும் குறிப்பிடவில்லை

அதற்கு மாறாக, 'எவ்வுயிர்க்கும் ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப வாழ்வு தரும் செய்ய மலர் முகமும்' என்று முருகப் பெருமானின் கருணைத் திறத்தை எடுத்துரைக்கிறார் குமரகுருபரர்.

கண்ணதாசன் காட்டும் ஆறுமுகம்

இருபதாம் நூற்றாண்டில் நம்மிடையே வாழ்ந்த கவிஞர் கண்ணதாசனையும் முருகப் பெருமானின் ஆறுமுகம் ஈர்த்திருக்கின்றது. அவருடைய திரையிசைப் பாடல்களில் இரண்டு பாடல்கள், அறுமுகப்

புனைவைக் குறிப்பிடுகின்றன. 'கந்தன் கருணை' என்னும் படத்திற்காக எழுதப்பட்ட பாடல் வருமாறு!

"தாமரையில் பூத்துவந்த தங்கமுகம் ஒன்று
தண்ணிலவின் சாறெடுத்து வார்த்தமுகம் ஒன்று
பால்மணமும் பூமணமும் படிந்தமுகம் ஒன்று
பாவலர்க்குப் பாடம்தரும் பளிங்குமுகம் ஒன்று
வேல்வடிவில் கண்ணிரண்டும் விளங்குமுகம் ஒன்று
வெள்ளிரதம் போலவரும் பிள்ளைமுகம் ஒன்று"

இப்பாடலில் வரும் 'தாமரையில் பூத்துவந்த தங்கமுகம்' என்பது முருகனின் பிறப்பை- தாமரைப் பொய்கையில் வந்து உதித்த தன்மையை- எடுத்துக்காட்டுகின்றது; 'பாவலர்க்குப் பாடம் தரும் பளிங்கு முகம்' என்பது, அறியாமையைப் போக்கி அறிவு நல்கும் 'ஞான பண்டிதனாக' முருகன் இருப்பதை உணர்த்துகிறது; 'வேல்வடிவில் கண்ணிரண்டும் விளங்குமுகம்' என்பது முருகப் பெருமான் வள்ளி தேவியுடன் அமர்ந்திருக்கும் தோற்றத்தை எடுத்துக் கூறுகிறது; பிற மூன்றும், ஒளி பொருந்தி விளங்கும் முருகப் பெருமானின் முகப் பொலிவினை எடுத்துக் காட்டுகின்றன. அழகியலும், அருளியலும் இணைந்து விளங்கும் நிலையில் இவ்வருணனை அமைந்துள்ளது.

"மங்கையரின் குங்கமத்தைக் காக்கும் முகம் ஒன்று
வாடுகின்ற ஏழைகளைக் காணும் முகம் ஒன்று
சஞ்சலத்தில் வந்தவரைத் தாங்கும் முகம் ஒன்று
சாதிமத பேதமின்றிப் பார்க்கும் முகம் ஒன்று
நோய் நொடிகள் தீர்த்து வைக்கும் வண்ணமுகம் ஒன்று
நூறுமுகம் காட்டுதம்மா ஆறுமுகம் இங்கு"

என்று 'தெய்வம்' படத்திற்காக எழுதப்பட்ட அவரது பாடலின் அறுமுகப் புனைவு, சமூகவியல் சிந்தனையுடன் அமைகின்றது. இச்சமூகத்தில் வாழும் ஏழை, எளியவர், பெண்கள், நோயாளிகள் என யாவருக்கும், சாதி மத பேதமின்றி அருள் புரிபவன் முருகன் என்பதை இப்புனைவு எடுத்துக் காட்டுகின்றது.

முடிவுரை

இங்ஙனம் முருகப் பெருமானின் அறுமுகப் புனைவுகள் நக்கீரர், கச்சியப்ப சிவாசாரியார், திருப்புகழ்ப்பாடல் ஆசிரியர், குமரகுருபரர், கண்ணதாசன் ஆகியோரால் காலந்தோறும் சிற்சில வேறுபாடுகளுடன் பாடப்பட்டுள்ளதை அறியலாம்.

ஒளி வழங்கு முகம், வரம் கொடுக்கும் முகம், வேள்வி காக்கும் முகம், ஞானம் உணர்த்தும் முகம், பகைவரை அழிக்கும் முகம், அருள் பொழியும் முகம் எனச் சங்க நூலான திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் அறுமுகங்களை முருகனின் ஆறு பண்புகளாக விளக்கிச் செல்கின்றார்.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் எழுந்த கந்த புராணத்தில், கச்சியப்ப சிவாசாரியார், வடமொழிப் புராணங்களையும் சம்கிதைகளையும் பின்பற்றி முருகனின் தோற்றத்தையும், ஆறுமுகத் தத்துவத்தையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

திருப்புகழில் அமைந்துள்ள முருகன் துதிப்பாடல் 'வேள்வி காக்கும் முகத்தை' விடுத்து கந்த புராணக் கதையைப் பின்பற்றி, 'குன்று வடிவில் நின்ற கிரௌஞ்சாசுரனை முருகப் பெருமான் அழித்த வரலாற்றை எடுத்துரைக்கின்றது.

குமரகுருபரர், வேள்வி காக்கும் முகத்திற்குப் பதிலாக வழிபடுபவர் வினைதீர்த்துப் பேரின்ப வாழ்வு தரும் முகத்தைக் குறிப்பிடுகின்றார்.

கவியரசு கண்ணதாசனின் அறுமுகப் புனைவுகள் அவரது அழகியியல், அருளியியல், சமூகவியல் சிந்தனைகளை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்துள்ளன.

"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

– புறநானூறு

பொருள்: மலர்தலை உலகம் என்னும் தொடர் மக்களைக் குறிக்கும். ஆள்பவன் உயிர்; ஆளப்படும் மக்கள் உடம்பு. இது சங்ககாலக் கருத்து. ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் வாழ்ந்த கம்பர்,

"உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்"

என்று கூறினார். இவர் கருத்துப்படி மக்கள் உயிர்; மன்னன் உடம்பு. இது கம்பரின் கருத்துப்புரட்சியன்றோ?

சோழன் -மணக்கிள்ளி

- அறிஞர் T.N. அப்பனையங்கார்

சில ஆண்டுகளுக்கு முன்னர் வெளிப்பட்ட சேரன் செங்குட்டுவன் என்னும் அரியபெரிய ஆராய்ச்சி நூலின்கண்ணே 'செங்குட்டுவன் சமகாலத்தரசர்' என்ற பகுதியில் மணக்கிள்ளியென்பானோர் சோழலரசன் குறிக்கப்படுகிறான். அன்றியும், அதிற் சங்ககாலத்தே சோழவரசர் உறந்தைச்சோழரென்றும் புகார்ச்சோழரென்றும் இருபகுதியினராய் அரசாண்டனரெனவும் கூறப்பட்டுள்ளது.

இவ்விருகூற்றுக்களிலும் குற்றமிருப்பதாக நினைத்து ஸ்ரீசோமசுந்தரதேசிகரவர்கள் சென்ற கார்த்திகைமாதச் செந்தமிழ்ப்பகுதியிலே தமதபிப்பிராயத்தை வெளியிட்டனர். மணக்கிள்ளியென்பது பெண்பாலுக்குரிய பெயரென்பதும், சோழன் மணக்கிள்ளி வேண்டுமென்பதும், சோழவரசர் உறையூர்ச் சோழர் புகார்ச்சோழரென இரண்டு பகுதியினராய்ப் பிரிக்கப்படுதல் தகாதென்பதுமே அவர் கொள்கைகளாகும்

இனி, யானறிந்தவளவில், இவ்விஷயத்தில் செங்குட்டுவன் நூலாசிரியர் கொள்கைகளே தகுதியுடையனவாமென்பது பற்றிச் சில கூறுவேன்.

சோழன்மணக்கிள்ளியென்ற பெயர் பதிற்றுப்பத்தின் ஐந்தாம்பதிகத்திலே வருகின்றது. அதில்

'வடவ ருட்கும் வான்றோய் வெல்கொடிக்
குடவர் கோமான் நெடுஞ்சேர லாதற்குச்
சோழன் மணக்கிள்ளி யீன்ற மகன்'-

என்று செங்குட்டுவன் கூறப்படுகிறான். அதிலுள்ள சோழன்மணக்கிள்ளியென்ற தொடரை நோக்கும் போதே அது ஆண்பாற்பெயரென்பது யார்க்கும் புலனாகாதிராது. ஆதலின் 'செங்குட்டுவன்' நூலாசிரியரும் அங்ஙனமே கொண்டனர். மணக்கிள்ளியென்பது ஆண்பாற் பெயராகவே 'மணக்கிள்ளியீன்றமகன்' என்பதிற் பொருள் விளக்க மெய்துமாறில்லை' ஆதலின் அவர் 'மணக்கிள்ளிமகளீன்றமகன்' என ஒரு சொற் பெய்து அதனைப் பொருளொடுபொருத்திக் காட்டிச் சேரன் செங்குட்டுவனுக்குத் தந்தை நெடுஞ்சேரலாதனென்றும், தாய் சோழன் மணக்கிள்ளிமகளென்றும் வெளிப்படுத்திச் சென்றனர்.

இஃதிங்ஙனமாகவும், தேசிகாலர்கள், 'இதனானே நெடுஞ்சேரலாதற்குச் சோழன்மகள் மணக்கிள்ளியென்னும்

கோப்பெருந்தேவியின் மகனாகக் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் பிறந்தா னென்பதன்றி, மணக்கிள்ளியென ஒரு சோழ னிருந்தானென்றும் அவனுக் கொரு பெண்ணிருந்தாளென்றுங் கூறுதற் கில்லை' என்று கூறினார். அவருடைய கொள்கைக்குமே, சோழனென்பதற்கும் மணக்கிள்ளியென்பதற்குமிடையே மகள் என ஒரு சொல் வருவித்துரைக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இருவருடைய கொள்கைக்கும் மகளென்ற ஒரு சொல்லை முன்னோ பின்னோ வருவித்துப் பொருள் கொள்ளவேண்டுவது இன்றியமையாதாகின்றது. அங்ஙனம் செய்தலின் எது மிகவும் பொருத்தமுடையதென்பதே ஈண்டாராய்ந்தறிய வேண்டுவதாகும்.

சங்க நூல்களிற் பலவிடங்களிலும் நலங்கிள்ளி, திருக்கிள்ளி, நெடுங்கிள்ளி, பெருநற்கிள்ளி, கோக்கிள்ளி நெடுமுடிக்கிள்ளி என்றற்றொடக்கத்துச் சோழவரசர்கள் பெயர் காணப்படுகின்றன. அவற்றுளொன்றேனும் பெண்பாலை யுணர்த்தாமையின் அவற்றோ டொப்புமையுடைய மணக்கிள்ளியென்னும் பெயரும் பெண்பாலையன்றி ஆண்பாலையே யுணர்த்தவேண்டுமென்பது தெளிவாம்.

அஃதன்றியும், தேசிகரவர்கள் கொள்கைப்படி மணக்கிள்ளியென்பது சோழன்மகளையே குறிப்பதாயின் அவன் செங்குட்டுவனின் நெடுஞ்சேரலாதன் மனைவியுமாகவேண்டும் ஆனால் செங்குட்டுவன்றாயும் நெடுஞ்சேரலாதனுடைய மனைவியும் இன்னாரென விளங்கக்கூறுகின்ற பிறிதொரு சான்றொடு அது மாறுகொள்ளுதலின் அக்கொள்கை வலியற்றதாகின்றது.

11347

சிலப்பதிகாரப் பதிகத்தின்தொடக்கத்தில் 'குணவாயிற் கோட்டத்தரசுதுறந்திருந்த, குடக்கோச்சேர லிளங்கோவடிகட்கு' என்பதனுரையிலே அடியார்க்குநல்லார், இளங்கோவை அடிகளெனக் கூறியதன்வரலாற்றை விளக்குமிடத்து, 'குமரியொடு வடமியத்தொரு மொழிவைத் நூலகாண்ட சேலாதற்குத் திகழொளி ஞாயிற்றேழ்பரிநெடுந்தேர்ச் சோழன்றன்மகணற் சோணையின்ற மக்களிருவருண் முன்னோன்' எனச் செங்குட்டுவனைக் குறிப்பிடுதலானே அவன்றந்தை நெடுஞ்சேரலாதனென்பதும் தாய் நற்சோணையென்பதும் தெள்ளிதிற் புலனாகும். ஆகவே, அவனறாய் மணக்கிள்ளியென்பது சிறிது மொவ்வாதாம்.

இதுகாறுங் கூறியவற்றால், மணக்கிள்ளியென்பது ஒரு சோழன் பெயரேயென்பதும், அவன் மகளே நற்சோணையென்ற பெயருடன் செங்குட்டுவன்றாயாகவும் நெடுஞ்சேரலாதனுடைய கோப்பெருந் தேவியாகவும் கருதப்படுகின்றதென்பதும் இனிது விளங்கும்.

இனி, சோழன் மணக்கிள்ளியென ஒருவனிருந்தானெனச் சங்கநூல்களிற் பிறிதோரிடத்துங் காணப்படாததென்னையெனின் அது கடாவன்று. என்னை? மணக்கிள்ளியென்பது தேசிகரவர்கள் கொள்கைப்படி

பெண்பாற்பெயரேயாயினு மதன்கண்ணு மக்குற்றந் தங்குமாதலினென்பது. ஓரிடத்தன்றிப் பிறவிடங்களிற் காணாத எத்துணையோ பெயர்கள் சங்க நூல்களிற் காண்கிறோம்.

நிற்க, பதிற்றுப்பத்தின் பதிகங்கள் ஒவ்வோரசனையும் இன்னாரீன்ற மகனெனக் கூறப்புக்குழியெல்லாம் பெண்பாலையுணர்த்தி, அவளீன்ற மகன்எனக் கூறுதலே வழக்காறாகவுடைமையைத் தேசிகாவர்கள் தம் கொள்கைக் குற்ற துணையாகக் கருதுகிறார்கள். இஃதிருவகைக் கொள்கைக்கு மொக்கும். சோழன் மணக்கிள்ளியீன்றமகனென்பது 'சோழன் மணக்கிள்ளிமக ளீன்றமகனெனவிரியுங்கால், சோழன்மணக்கிள்ளி மகளெனப் பெண்பாலை முன்னருணர்த்திப் பின்னர் அவளீன்றமகன் செங்குட்டுவனே அமைவுடையதாகக் காணப்படும். படவே, பதிற்றுப் பத்தின் பதிகந்தோறும் சுங்ஙனமாகவுள்ள வாக்கியங்களைத் தேசிகரவர்களெடுத்துக் காட்டுவது பயன்பெறாதாயிற்று.

சோழன்மணக்கிள்ளியீன்றமகனென்னுஞ் சொற்றொடருள்ள நிலையில் அதற்குச் 'செங்குட்டுவன்' நூலாசிரியர் கூறியதன்றிப் பிறிதொரு சிறந்த பொருள்காண்டல் எவ்வாறானு மியலாதாகும்.

இது நிற்க, தேசிகாவர்கள், சோழவரசரில் உரையூரையாண்டவர்களென்றும் புகாரையாண்டவர்களென்றும் இருபிரிவினிருந்த னராகக் கொள்ள ஏதுவில்லையென்றனர். 'சேரன் செங்குட்டுவன்' நூலிலேயே செங்குட்டுவன் சமகாலத்தரச ரென்ற பகுதியில் அக்கொள்கைக்குற்ற காரணங்கள் விளங்கவுரைக்கப் பட்டிருக்கின்றன.

பண்டைத் தமிழ் நூல்களைக் கருவியாகக் கொண்டு சேரசோழபாண்டியருடைய நாடுநகரங்களின் நிலையினையாராய்-வார்க்குச் சோழநாட்டின் கண்ணே ஒத்தசிறப்புடன் விளங்கிய இரண்டு தலைநகரங்களிலிருந்தனவென்பது எளிதிற் புலப்படும் பாண்டியர்க்கு மதுரையும் சேரர்க்கு வஞ்சியும் எத்துணைச் சிறப்புடையனவோ, சோழர்க்கு அத்துணைச் சிறப்புடையன புகாரும் உறையூருமாகிய இரண்டு தலைநகரங்களுமாகும், முடியுடைத் தமிழ் வேந்தர்மூவருடைய தலைநகரங்களையும் கூறப்புகுந்த பழைய தமிழ் நூல்கள், அவற்றைப் புகார் மதுரை வஞ்சி யென்றமுறையிலேனும் குறிப்பிடுதலே இதற்குப் போதியசான்றாகும். சிலப்பதிகாரக் காண்டப்பகுப்புமுறையில் மதுரை வஞ்சி இவற்றிற்கு நிகரான சிறப்புடன் சோழர்க்குரியநகரம் புகாராக அறியப்படுகின்றது. சிறுபாணாற்றுப்படையில் வஞ்சி மதுரை உறந்தையென்றமுறை காணப்படுகிறது.

"நான்மறைக் கேள்வி நவில்குர லெடுப்ப
வேழ வின்றுயி லெழுத வல்லதை
வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியி னெழாதெம் பேரூர் துயிலே".

எனவரும் மதுரையைக் குறித்த பரிபாட்டினாலும் உறந்தையே சோழர் தலைநகராய் மதுரை வஞ்சி, இவற்றோடொப்பிடத்தக்க பெருமையுடைய தென்று விளங்குகிறது. சிலப்பதிகார வேனிற் காதையிலே,

"நெடியோன் குன்றமுந் தொடியோள்பெளவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புன னன்னாட்டு
மாடமதுரையும் பீடா றுறந்தையும்
கலிகெழு வஞ்சியு மொலிபுனற் புகாரு
மரைசுவீற் றிருந்த உரைசால் சிறப்பின்
மன்னன் மாரன் மகிழ்துணை யாகிய
இன்னிள வேனில்".

என வருதலைக் கற்றார்பலரும் நன்கறிவர். அதன்கட் சேர பாண்டியர்க்கு ஒவ்வொரு தலைநகரமும் சோழர்க்கு அவற்றிற்கீடாக இரண்டு தலைநகரங்களுங் குறிக்கப்படுகின்றன. ஆக இவற்றால், சோழவரசர் புகார் உறந்தைமயென்னுமிரண்டையுமே சிறந்த தலைநகரங்களாகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தனரென்பது நன்குவிளங்கும். சோழர்க்கு இரண்டு தலைநகரங்களிருந்தனவாகவே சோணாடு இரண்டு நாஜதானிகளாக அக்காலத்துப் பிரிக்கப்பட்டிருந்தமையும் எளிதி னுணரப்படும்.

ஆதலி னங்ஙனம் பிரிவுபட்ட இரண்டு ராஜதானிநகரங்களிலும் சோழர்குடிக்குரிய இருவேறு அரசர் நிலைபெற்று ஆட்சிபுரிந்துவந்தனரெனக் கொள்ளுதலும் நேர்மையுடையதேயாகும். "ஒருபுலவர் ஒரே வேந்தர்வம்சத்திற் பலரைப் பாடும்படிநேர்ந்ததற்கு இதுவே காரணமாகும். இவ்வாறு கொள்ளாவிடத்துப் பலவரசர் ஒரேவம்சத்தில் ஏககாலத்தில் இருந்தவராகக் காணப்பட்டுச் சரித்திரவொற்றுமைபெறுவதில் மயக்கங்கொள்ள நேரும்". (சேரன்-செங்குட்டுவன்-பக்கம்-101).

இனி, அவ்வகை ஆட்சிபுரிந்தவர்களிற் புகார்ச்சோழர்க்கும் உறையூர்ச்சோழர்க்கும் பெரும்போர்மூண்டிருந்ததாகவும் சங்க நூல்களாலறியப்படுகின்றது.

புகாரிலிருந் தரசாண்டவர்களிற் சோழன் நலங்கிள்ளியென்பானெருவன் புலவனும் போர்வீரனுமாகச் சிறந்து விளங்கினன். (புற ம் 30, 45,47) அவன் தன் தாயத்தானும் உறையூர்ச்சோழனுமாகிய நெடுங்கிள்ளியுடன் போர்கருதி உறையூரை முற்றுகையிட்டனன். 'சோழன் நலங்கிள்ளி உறையூர் முற்றியிருந்தானையும் அடைத்திருந்த நெடுங்கிள்ளியையும் கோவூர்கிழார் ' பாடிச் சந்து செய்ததாகவுள்ள புறப்பாட்டொன்று மிகுதியு மழகமைந்ததாகக் காணப்படுகின்றது.

உன்னத உடல் நலம் உயர்வான வாழ்வு தரும்

உடல் நலப் பரிசோதனை திட்டங்கள்

- ✤ எக்ஸிகியூட்டிவ் முழு உடல்நலப் பரிசோதனை
- ✤ முழு உடல் நலப் பரிசோதனை
- ✤ முதியவர்களுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- ✤ குழந்தைக்களுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- ✤ திருமணத்திற்கு முன் பரிசோதனை
- ✤ முழு இருதய பரிசோதனை
- ✤ முழு நீரிழிவுப் பரிசோதனை
- ✤ புற்று நோய்ப் பரிசோதனை
- ✤ மதுப் பழக்கமுள்ள நோயாளிகளுக்கான முழு சோதனை
- ✤ ஆண்களுக்கான பாலியல் குறைபாடுகள் குறித்த சோதனை
- ✤ வெளிநாடு செல்லும் பயணிகளுக்கான பரிசோதனை
- ✤ பொது உடல் நலப் பரிசோதனை
- ✤ வேலைக்குத் தகுதி பெற மருத்துவப் பரிசோதனை

காலை 8.00 மணி முதல் 9.00 மணிக்குள்
நீங்கள் விரும்பிய நாளில் (ஞாயிறு உள்பட)
வெறும் வயிற்றில் மல சாம்பிளோடு நேரில் வரவும்.

உங்கள் நோய் பற்றிய பிரச்சனைகளுக்கு தொலைபேசியின் மூலம்
இலவச ஆலோசனை வழங்கப்படும். திங்கள் முதல் வெள்ளி வரை.
நேரம் : மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை.

மாஸ்டர் ஹெல்த் செக்-அப் டிபார்ட்மெண்ட்

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

லேக் ஏரியா மேலூர் ரோடு, மதுரை - 625 107. ✆ 536361-68
Fax : 536353 E-mail : mmhrc @ md2.vsnl.net.in

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 741116